திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.

மாலை : 8   12—8—55 வெள்ளி : 14 பக்கங்கள் : விலை 3 அணா   மலர் : 54

குன்றக்குடி மட அதிபதியின் அங்கலாய்ப்பு

அரசியல் வாதிகள் மதத் துறையில் தலையிடக் கூடாதாம்!

இராமநாதபுரம் — கண்டர மாணிக்கத்தில் சென்ற வாரம் பதின்மூன்றரை கிராமத்தார்களின் மகேஸ்வர பூஜை நடைபெற்றதாம்! அவ்விழாவில் சில அரசியல்வாதிகளும் சொற்பொழிவாற்றினராம்!

இறுதியாக பேருரை நிகழ்த்திய குன்றக்குடி மட அதிபதி "மதவாதிகள் அரசியலில் புகுதல் கூடாது என்று கூறும் அரசியல் வாதிகள் தாங்கள் மட்டும் மதத் துறையில் ஏன் புகுதல் வேண்டும் என்பதைப்பற்றி யோசிப்பதில்லை" என அங்கலாய்த்துக் கொண்டாராம்!

குன்றக்குடிகளார் இன்று கேட்கும் இக்கேள்வியை இதற்கு முன்பு பல சாமியார்கள் கேட்டிருக்கின்றனர். கேட்டது மட்டுமல்ல மதவாதிகளின் கோணங்கித் தனத்தைக் கண்டித்த அரசியல் வாதிகளுக்கு பல தொல்லைகளையும் கொடுத்து வந்தனர். இதனை நமது நாட்டின் அரசியல் திருப்புகளே நன்கு எடுத்துக் காட்டும்.

அரசியல் வாதிகள் மதத்துறையில் ஈடுபட்டதால் மதத்திற்கு இன்னின்ன ஆபத்து ஏற்பட்டதென்று குன்றக்குடி மடஅதிபதியிலிருந்து லோகக்குரு என்று அழைக்கப்படும் சங்கராச்சாரி வரை எவரும் கூறிட முடியாது. இன்னும் சொல்லப்போனால் அரசியல்வாதிகள் மதத்துறையில் ஈடுபட்ட காரணத்தினால் மதக்கிறுக்கர்களுக்கு இருந்துவந்த வெறித்தன்மை ஓரளவு தணிந்தது என்றே கூறலாம்.

ஆனால் மதவாதிகள் அரசியலில் புகுந்ததினால் அரசியல் துறையிலே ஆக்கப்பணி நடைபெற்றது என்று அதுவும் குறிப்பாக இந்து மதத் தலைவர்களால் ...ற முடியுமா என அறைகூவல் விடுக்க விரும்புகிறோம்.

மனிதனுக்கு மனிதன் பிறப்பில் உயர்வு தாழ்வு, தொட்டால் ...டு, ஆலயங்களில் ஜாதித் ...மிர், ஆண்டவன் பேரால் ஆபா... பழக்க வழக்கங்கள், ஆகியவைகளைத்தும் அரசியல் வாதிகளின் முயற்சியால் அழித்தொழிக்கப்பட்டு வருகின்றனவா அல்லது மதவாதிகள் என்போர் தாங்களே மனவளம் பெற்று ஆவன செய்ய முன்வந்தனரா யென்று கேட்கிறோம்.

வடநாட்டிலே ராஜாராம் மோகன்ராய், காந்தியடிகள் போன்றாரும், தென்னாட்டில் சுயமரியாதை இயக்கமும், சவுந்திர பாண்டியனார், பெரியார் ராமசாமி அறிஞர் அண்ணா போன்றவர்களும் ஆற்றிய — ஆற்றிவரும் அரும் பணிதானே இன்றைய மதவாதிகள் ஓரளவாவது தெளிவு பெற்றிருப்பது. இதனை குன்றக்குடி மட அதிபதியோ அல்லது அவரைவிட வேறெந்த பெரிய அடிகளோ மறுக்கக் கூடுமா யென்று கேட்கிறோம்.

ஆனால் மதவாதிகள் என்போர் அரசியல் துறையில் புகுந்து மக்களின் நல்வாழ்வுக்காக நன்மை புரிந்திருக்கின்றார்கள் என்று கூறுவதற்கில்லை. வேண்டுமானால் இன்றைய குன்றக்குடிகளாரைப் போன்றவர்கள், சுயமரியாதை இயக்கப் பணியின் காரணமாக தெளிவு பெற்றோ அல்லது காலத்தோடு ஒட்டி வாழ வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டதினாலோ அரசியலைப் பற்றியும் ஏதோ சிலவற்றைப் பேசிக் கொண்டு தங்களைப் போன்ற மதவாதிகளும் அரசியல் முற்போக்குக் கருத்துக்களுக்கேற்ப பணியாற்றி வருகிறோம் என்று சொல்லிக் கொள்ளப்படுகிறதேயன்றி நடைமுறையில் இன்றுங்கூட மதவாதிகள் என்போர் தங்களின் பத்தாம்பசலிக் கொள்கையை அறவே கைவிடுத்தார்கள் என்று எண்ணுவதற்குமில்லை.

மனித சமுதாயத்தை வாழ வைக்க வழிவகை தேடிய பெரியார்களின் உயிர்களுக்கு நாசத்தை விளைவித்தது மதவாதிகளே யல்லாது அரசியல் வாதிகளல்ல.

நந்தனார், இராமலிங்கர் போன்றபொதுப்பணியாளர்களையும் அதுபோன்றே மேலைய நாட்டுச் சீர்திருத்த செம்மல்களையும் மதவெறித்தன்மைதான் நயவஞ்சகமாக அவர்களின் உயிருக்குக் கொடுமை விளைவித்ததே யல்லாது அரசியல்வாதிகள்ல்ல என்பதை உலகமே அறியும்.

ஏன் அதிகம் கூறுவானேன், காந்தியடிகளை சுட்டுக் கொன்றது அரசியல் வாதிகளா அல்லது மதவாதிகளா யென்பதை குன்றக்குடி மத அதிபதி அறியார் போலும்!

காந்தியடிகளைச் சுட்டுக் கொன்ற நாதுராம் விநாயக கோட்ஸே 'இந்து மதம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகவே நான் காந்தியை சுட்டுக்

கொன்றேன்' என அன்று மார்தட்டிப் பேசி மதவெறித் தன்மையைக் காட்ட முனைந்தானே யல்லாது காந்தியாரை சுட்டுக் கொன்ற பிறகாவது மனிதத் தன்மை பெற்றானில்லை' அவனிடம் குடிகொண்டிருந்த மதவெறியின் தன்மையை அளவிட அவன் கொடுத்த வாக்கு மூலமே போதுமானதாகும்.

ஆகவே அரசியல் வாதிகள் மதத்துறையில் ஈடுபடுவதினால்மதத்திற்குமட்டுமல்லாது மதவெறியில் மூழ்கியுள்ளவர்களுக்கு கூட பேராபத்து ஏற்பட்டதில்லை, அதற்கு மாறாக மதவாதிகள் ஓரளவு அறிவு பெற்று வருகிறார்கள் என்பதற்கு இன்றைய மதவாதிகள் என்போரின் நடவடிக்கைகளும் பேச்சுமே போதிய சான்றாகும்.

மதவாதிகள் அரசியலில் புகுவதினால், அரசியல் பெருமை யுற்றது என்று கூறுதற்கு ஆதாரமேயில்லை. குட்டையில் ஊறிய மட்டைகளைப்போல வீண் வியாக்கியானங்களைப் பேசிக் கொண்டு பழமைக்கு மெருகு கொடுக்கும் கைவரிசையில்இறங்குகின்றனரே யல்லாது நற்பணியாற்ற முடிவதில்லை.

எனவே அரசியல் வாதிகளுக்கு ஈடாக மதவாதிகளை ஒப்பிட்டுப் பேசுவதே பெருந் தவறாகும் என்பதை குன்றக்குடி மடஅதிபதியும் அவரைப் போன்றாரும் உணருதல் வேண்டும்.

இரண்டாவதாக — அரசியல் வாதிகளால் மதவாதிகள் பழமை வெறியிலிருந்து விடுபடும் அறிவு விளக்கம்பெற்று வருகிறார்களாதலின், அரசியல்வாதிகள் மதத் துறையில் தலையிட்டு அதில் மலிந்துள்ளகேடுகளை அழித்தொழிக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

மதம் ஓர் இருட்டறை. அரசியல் ஓர் ஆணையா விளக்கு. எனவே இருட்டறையில் உள்ளவர்களுக்கு பிரகாசம் தேவை. ஆகவே அரசியல் வாதிகள் மதத் துறையில் ஈடுபடுவது கூடாது என்று உளுத்துப்போன பேச்சு பேசுவதானது இருட்டறையில் மக்களை அடைத்து வைத்துஅநீதி புரியும் ஒருவன் வெளிச்சத்தைக் கண்டு அலறினால் அதனை எதற்கு ஒப்பிட முடியுமோ அந்த 'பட்டம்'தான் அரசியல் வாதிகளுக்கு உபதேசம் புரியத் துணியும் மதவாதிகளுக்கு உரித்தாகும்.

இந்து மதம் ஈவிரக்கமின்றி உத்தமர் காந்தியடிகளின் உயிரைக் குடித்த பிறகும்கூட மதப் பெருமையைப் பேசிக்கொள்ளவும், மதத் துறையினருக்கு தனிச் சலுகை வேண்டுமென்று கூப்பாடு போடவும் வெட்கப்பட வேண்டாமா?

எனவே குன்றக்குடி மட அதிபதி தமது வரட்டு வேதாந்தத்திற்கு தாமாகவே முற்றுப்புள்ளி வைத்துகொள்ளவேண்டுகிறோம்.

—நக்கீரன்

Filmed as bound

ரஷ்யாவில் சிறுகதை!

1

ஒரு செக்கோவை, கோகோலியை உற்பத்தி செய்வதற்கு ரஷ்யாவில் இயலவில்லை என்பது உண்மைதான். 'கற்பனைக் காவியங்கள்' இன்னும் வளராத நிலைதான் அங்கு. பெரும்பாலான சோவியத் புத்தகங்கள் — (சிறுகதை உட்பட)—வெளியில் காணும் உண்மைகளை உண்மையாகவும் உயர் நோக்குடனும் ஆக்கப்பட்டதுதான். இவைகளில் மிகுதியானவை கற்பனை விற்பன்னரின் காவியங்களான காரணத்தினால் உயர்ந்த ரகத்தைச் சார்ந்தவைகளாகத் திகழ்கின்றன. வெளியில் தென்படும் உண்மைகள் கலைஞனின் உள்ளத்துடன் ஒன்றி சித்திரம் தீட்டப்பட்டு பின்னர் பேனா முனையில் கலை மெருகுடன் உருவாவதற்கு சில முக்கியமான சூழ்நிலைகள் இருந்துதானாக வேண்டும். இவைகளில் மிக மிக முக்கியமானது கற்பனையிலிருந்து கலைஞனின் உருவம் தனியாக நிறுத்தப்பட வேண்டும் என்பதுதான்.

அக்டோபர் புரட்சியில ஆரம்பித்து இரண்டாம் உலக யுத்தம் முடியும் வரையிலும் தங்களுடைய தாய் நாட்டின் வர்க்கத்தினருடைய உயர்விற்காகத்தான் அவர்களின் கலைக்கருவிகள் உருவாக்கப்பட்டன. அந்தச் சூழ்நிலையில் தங்களுடைய கலையில் நாட்டின் நிலைமையை மறைக்க அவர்களால் இயலவில்லை என்பதுதான் உண்மை. சோவிய இலக்கியத்தின் பொற்காலம் ஆரம்பமாகிறது என்று கூறத்தக்க நல்ல கலை உருவங்கள் இப்பொழுது தான் வெளிவர ஆரம்பித்திருக்கின்றன என்றும் கூறலாம்.

அக்டோபர் புரட்சியின் பிறகு இரத்தப் படையும் சார் கூட்டாளிகளான வெள்ளைகளும் (Whites) போரில் ஈடுபட்டிருந்தனர். இரத்தப் படையின் ஓர் போர் வீரனை ஐசக்பாபல் என்பவரின் 'ரெட்காவல்ரி' எனும் கலைப் பொக்கிஷம் இந்தப் போரின் பல துறைகளைப்பற்றிய நல்லதோர் குறிப்பு என்று கூறும்படியாக அமைந்திருக்கிறது. இந்தக் கதைகளில் மிகமிக நல்லது என்று கூறப்படுவது 'ஓர் கடிதம்' என்ற கதையாகும்.

மார்ஷல் புடெனி என்பவரின் தலைமையில் போர்புரியும் போர் வீரர்களில் ஒருவன் தன்னுடைய தாய்க்கு தீட்டும் ஓர் மடலாக இது உருவாக்கப்பட்டிருக்கிறது. போர்முனையில் வாழும் வாழ்க்கையைக் குறித்தும் இரத்தப் படையும் சார் படையும் ஒன்று கலக்கும் நிலைமைகளைப் பற்றியும் நேரடியாகப் பார்த்த ஒருவனுடைய கண்ணோட்டத்துடன் மிக எளிதான மொழியில் எழுதப்பட்ட கதைதான் இது. மனிதன் சாதாரண உணர்ச்சிகளைக் கூட எவ்வளவு கட்டுப்படுத்தி இதை எழுதியிருக்கிறான் என்பதற்கு எடுத்துக்காட்டாக கதையின் ஓர் பகுதியைக் கீழே தருகிறேன்.

...'மேலும் நான் சொல்வதற்கிருப்பது சுமார் ஒருவருடத்திற்கு முன்னால் அப்பா என்னுடைய சகோதரனை—பியோடோர் டிஷோடீச் குர்டிகோவை — கொன்றதைப் பற்றித்தான். அன்று அப்பா டெனிக்கின் படையிலே ஓர் கம்பெனியின் கமாண்டராக இருந்தார்; அவர்கள் சார் ஆட்சி காலததிலிருந்ததைப் போல மெடல்கள் அணிந்திருந்தார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். எங்களுடைய கூட்டத்திலிருந்த ஐந்தாம் படைகள் சதி செய்ததின் காரணமாக நாங்கள் அனைவரும் கைதிகளானோம். அண்ணன் பியோடோரை அப்பா பார்த்துவிட்டார். 'அழுக்கடைந்த பிணமே, சிவப்புநாயே பட்டி நாயின் மகனே' என்று கூறி அப்பா பியோடரை துண்டு துண்டாக்கினார். அவர்கள் அனைவரும் இரவு நெருங்கும் வரை அண்ணனை வாளால் வெட்டினார்கள். அண்ணன் சாகும்வரையில்...நான் எப்படியோ ஓடி உயிர் தப்பினேன். அவ்வளவுதான்.

ஒரு நாள், தனையனை ஈவிரக்க மின்றி வெட்டிக் கொன்ற இந்த 'வெள்ளைத் தலைவன் சிவப்புகளால் கைதி யாக்கப்பட்டான். அவனுடைய மற்றொரு புதல்வன். ஸெமியோனோ டிபோபிச் என்பவன் தான் அப்பொழுது சிவப்பர்களுடைய தலைவனாக இருந்தான் தன்னுடைய கரங்களால் தனையனைக் கொன்ற தந்தையின் கடைசிக்காலத்தைப் பற்றி பாபல் குறிப்பதைப் பாருங்கள்.

செமியோனு தகப்பனாரிடம் கேட்டான். 'அப்பா, என் கையில் அகப்பட்டுக் கொண்டதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்!'

தகப்பனார் பதில் கூறினார்:

எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

அப்பொழுது செமியோனு கேட்டான், அன்று பெடியாவைத் துண்டு துண்டாக்கினீர்களே அப்பா! அப்பொழுது உங்களிடம் மாட்டிக் கொண்டது, பெடியாவுக்குப் பிடித்திருந்ததா!

இல்லை.—தந்தை கூறினார் பெடியாவுக்குப் பிடிக்க வில்லை.

இப்படியும் ஓர் காலம் வந்து சேருமென்று அன்று நினைத்திருந்தீர்களா அப்பா!

'இல்லை'

...அப்படியானால் நாங்கள் இப்பொழுது உங்களுடைய கதையை முடித்துவிடுவோம் அப்பா. செமியோனு கூறினான். அப்பா செமியோனுவையும் அம்மாவையும் கன்னிமறியத்தையும் சபிக்க ஆரம்பித்தார். பிறகு செமியோனுவின் தாடி எலும்பில் இடித்தார். செமியோனு என்னிடம் அங்கிருந்து போகச் சொன்னான். அதனால் அவர்கள் எப்படித்தான் தகப்பனாரின் கதையை முடித்தார்கள் என்பதை வருணிக்க, என் அன்புள்ள அம்மா எனக்கு இல்லாமற் போய்விட்டது ஏனென்றால் என்னை அவர்கள் அங்கிருந்து அனுப்பி விட்டனர்.

'உப்பு;' 'ஜனரல் மாட்வேவிச்' என்பவைகள் பாபல் இயற்றிய நல்ல கதைகள் எனக் கூறலாம், ஓர் ஜமீந்தாரின் கடுமையான அடக்குமுறைகளுக்கு ஆளாக்கப்பட்ட 'மாட்வே' இரத்தப் படையில் சேர்ந்த பிறகு அந்த ஜமீந்தாரைப் பழிவாங்குவதுதான் 'ஜனரல் மாட்வே விச்' என்ற கதை. இந்தக் கதைக்கு ஓர் கோகோலின் கதையின் உயிர் இருக்கிறது. மாட்வே தனித்துத் தான் ஜமீந்தாரை நெருங்கி அவனைக் கொலை செய்கிறான். தற்குறியான ஓர் ஆடு மேய்ப்பவனான மாட்வேயிடம் ஒளிந்துகிடந்த வீரத்தைத் தட்டி எழுப்ப ஓர் புரட்சிக்காலம் வந்துவிட்டது. அதுதான் அவனுக்கு ஆதாரமாக இருந்தது என்பதுதான் கதைச் சுருக்கம்.

ரஷ்யாவின் புரட்சிப் படையிலிருந்தவர்களின் திறமையும் வீரமும் எடுத்துக் காட்டும் இக்கதைகள் பாபலின் தனித் திறனை எடுத்துக் காட்டுபவைகள்.

2

விஸெவாலாட் ஐவனோவ் என்பவர் ரஷ்ய நாட்டு வாசகர்களின் மனதிலே நல்லதோர் இடத்தைப் பெற்ற எழுத்தாளர். கார்க்கியைப் போன்று ரஷ்ய

டி, புருடோத்தமன். சென்னை

நாட்டின் மிகுதியான பாகங்களை இவரும் தன் கால்களின் உதவியாலேயே சுற்றிப் பார்த்தவர்.

'ஓர் பக்கீரின் அனுபவங்கள்' இவருடைய சொந்தமான அனுபவங்கள் உருவாக்கிய கதைகள்தான். வீரம் நிறைந்த காரியங்களில் விருப்பமும் ரஷ்ய நாட்டு மக்களின் குணமான நிலைமைகளைப் பற்றிய நல்லதோர் விளக்கமும் ஐவனோவின் கதைகளில் காணலாம். குழந்தை' என்பதுதான் இவருடைய கதைகளில் மிகச்சிறந்தது, 1920-ம் ஆண்டிற்கு அடுத்தாற்போல் நடந்த வரலாற்றுக் குறிப்புகள்தான் இக்கதையின் அடிப்படை எனக்கூறலாம். பாத்திர விளக்கத்திலும் சூழ்நிலை உருவாக்குவதிலும்வெற்றியடைந்த கதைகளில் இதுவும் ஒன்று.

மங்கோலியாவின் மணற்காடு. அங்கு இயங்கிவரும் ரஷ்யாவின் ரெஜிமென்டில் வேலை பார்க்கும் ஓர் போர் வீரன். அவனுடைய பெயர் அபனாசி பெட்ரோவிச் என்பது. அபனாசியுடன் ஐம்பது பேர்கள் இருப்பார்கள்!

அபனாசியைப் பார்த்தால் எப்பொழுதும் ஏன் அழுதுகொண்டே இருக்கிறார் என்று கேட்கத் தோன்றும். ஓர் சிறு குழந்தையைப்போல அழுதுக்கொண்டு இருப்பதுபோல் தோற்றமளிப்பார்; அவருடைய முகம் ஓர் சிறு குழந்தையின் முகத்தைப்போல சிறியது. உரோமமில்லாதது. ரோஜாப்பூவின் நிறமுடையது.

என்னதான் ஆனாலும் குதிரைமேல் ஏறிவிட்டால் அபனாசி மிகமிகக் கொடுமையானவன்...

மணற் காட்டில் கண்டெடுத்த ஓர் குழந்தையை அவன் வளர்க்கிறான்; அவன் அபனாசியின் அன்பைக் கவர்கிறான், அக்குழந்தையை கையிலெடுத்து அபனாசி தாலாட்ட ஆரம்பிக்கிறான்.

பாடுது வானம்பாடி....

பாடலோ கண்ணீர்த்துளி...

வேதனையின் பாழ் கானம்...

பாடுது பச்சைக்கிளி...

அபனாசி தன் கிராமத்தையும் அங்குள்ள ஆடுமாடுகளையும் சின்னஞ்சிறு குழந்தைகளையும் நினைத்து அழுகிறான்;

அவனுடைய கையிலிருந்த குழந்தையும் அழுகிறது. மங்கோலியாவின் மணற்காட்டில் வெப்பத்தால் படுத்துக் கிடந்த மணற் கனிகள் அவர்களுடன் சேர்ந்துஅழுகிறதோ என்று தோன்றும்,

அபனாசி ஒரு வாய் அப்பத்தை மென்று தின்றான், அழுகை நிறுத்தாத குழந்தையின் வாயில் ஓர் துண்டைத் திணித்தான்.

ப்...ப்...பி...ருசியிருக்கு சாப்பிடு.

ஆனால் குழந்தை ரொட்டித்துண்டு தின்பதாயில்லை. சூப்பைத் தந்து பார்த்தான். அதையும் சாப்பிடவில்லை. என்ன செய்வதென்று தெரியாமல் அபனாசி தவித்தான்.

அபனாசி தன் தோழர்களிடம் ஓர் குழந்தையின் அழுகுரலில் கூறிக் கொண்டிருக்கிறான்:

இதற்கு என்ன வழி செய்யலாம்! என்ன செய்வது! இதற்கு ஏதாவது வழி சொல்லித் தரக்கூடாதா! நாயின் பிள்ளைகளா!

கட்டுடைய உடலும் வளம் நிறைந்த மேனியும் படைத்த அவர்கள் ஒன்றும் தோன்றாமல் விழித்தார்கள். 'ஓர் பெண்மணி இருந்திருந்தால் இக்குழந்தை இப்படி பட்டினியால் தவித்திருக்காது.' அவர்கள் எல்லோரும் ஒருமுகமாகக் கூறினார்கள்.

அவர்களுடைய தலைவன் கூறினான். ஒரு பசுமாடு......ஒரு பசு மாடுதான் அவனுக்கு வேண்டும்.

அபனாசியும் ஐந்து தோழர்களும் பக்கத்துக் கிராமமான 'கிர்கிஸ்' நோக்கிக் கிளம்பினார்கள். ஒரு பசு மாட்டைப் பிடித்துக் கொண்டு வருவதற்காக!

பசுமாடு கிடைத்தது. அபனாசிக்கு அப்பொழுதுதான் தெரிந்தது குழந்தைக்குப் பால்தர ஓர் புட்டிக் குழாய் தேவை என்பது. பயத்தால் நடுநடுங்கும் 'கிர்கிஸ்' பெண்ணின் மூலைக் கண்களை கைகளால் அழுத்தி, அவன் ஆனந்தத்தால் ஆர்பரித்து சீட்டியடிக்க ஆரம்பித்தான். அந்தப் பெண்மணிக்கு ஓர் சின்னக் குழந்தையும் இருந்தது.

'ஆ...பால்தரும் புட்டி கிடைத்து விட்டது...முதல்தரமானது' அபனாசி கூப்பிட்டுச் சொன்னான். அபனாசி அந்தப் பெண்ணை படை குழுமியுள்ள இடத்திற்கு அழைத்துச் செல்கிறான்.

அப்பொழுதிலிருந்து அபனாசியின் தத்துப்பிள்ளை அழுவதை நிறுத்திவிட்டான். நாட்கள் சென்று மறைந்தன. அவனைப் பார்த்துக் கொண்டு அழுகுரலில் அவன் கூறுகிறான்.

'நல்ல பையன்! நல்ல பையன்!'

12-ம் பக்கம்

தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற

வெண் சங்கு

சீயக்காய்த் தூள்

எங்கும் கிடைக்கும்

REGD. NO. 136817

மனத்தில் மிகுந்த

செல்வம் ராணி

ஊதுபத்திகளை

உபயோகியுங்கள்



தயாரிப்பவர் :

வெண்சங்கு சீயக்காய்த் தூள் பாக்டரி

3037—38 டபீர் குளம்ரோடு

தஞ்சாவூர்

இந்தி ஆதிக்கக் கும்பலின் சாகசத்திற்கு சென்னை மேல் சபையில் சாட்டை

இனிக்கப் பேசி இன்னல் விளைவிக்கும் பித்தலாட்டத்தைக் கைவிடுமாறு பல்கலைக் கழக துணைவேந்தர்களின் எச்சரிக்கை

கவர்னர் சொற்பொழிவின் மீது நடைபெற்ற விவாதத்தின்போது சென்னை மேல் சபையில் எதிர்க் கட்சித் தலைவரும், சென்னை பல்கலைக் கழகத் துணை வேந்தருமான டாக்டர் எ. லட்சுமணசாமி அவர்களும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தரும் மேல்சபை உறுப்பினருமான டி. எம். நாராயணசாமி அவர்களும் தென்னாட்டில் இந்தி ஆதிக்கக் கும்பல் செய்துவரும் சாகசங்களை அம்பலப்படுத்தி எச்சரிக்கை விடுத்துப் பேசிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

"இந்தி மொழிப் பிரச்னையில் நாட்டின் ஒற்றுமையைப் பற்றிப் பேசுவதில் அர்த்தமேயில்லை. முக்கிய விஷயங்களில் ஒற்றுமை; பிற விஷயங்களில் வேற்றுமை: ஆனால் அனைத்திலும் இரு சார்பிலும் தாராள மனப்பான்மை. இதுவே இன்று நமக்குத் தேவை. இந்த வழிவகைதான் இந்தியாவின் ஒற்றுமையை நிலைபெறச் செய்யும் என்பதை இந்தியப் பேரரசினருக்கும், சென்னை மாநில சர்க்காருக்கும் நினைவூட்ட விரும்புகிறேன்" என்று எடுத்துக் காட்டி டாக்டர் எ. லட்சுமணசாமி அவர்கள் தொடர்ந்து பேசியதாவது :—

ஆங்கிலத்தில் பேசும் பழக்கமுடையவர்களில் பெரும்பாலானவர், மக்கள் சபையில், இப்பொழுது இந்தியில் பேசுவதாக அறிய வருகிறேன்; அதன் பலனாக, நடைபெறும் விவாதத்திற்குத் தங்களுடைய சிறந்த கருத்தை, தென்னாட்டுப் பிரதிநிதிகளால் அளிக்க முடியாமற் போகிறது: 'அங்கு சென்றால் இந்தியைக் கற்றுக் கொள்ள இயலும்' என்பதற்காகவா நாம் மக்கள் சபைக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறோம்? ஆங்கிலத்தில் பேசத் தெரியாதவர்கள் இந்தியில் பேசுவதாக இருந்தால், அப்பேர்ப்பட்டவர்களின் நிலையை நம்மால் புரிந்து கொள்ள முடியும். அரசியல் சட்டப்படி 1965-ம் ஆண்டு வரை, இரண்டு மொழிகளும் கையாளப்பட வேண்டும். உண்மை நிலை இவ்வாறு இருக்கும் பொழுது, 'இந்தியைத் திணிக்க எந்த இயக்கமும் நடைபெறவில்லை' எனக் கூறப்பட்டுவது நிச்சயமாக உண்மைக்குப் புறம்பானதே யாகும்.

இதுபற்றிய ஆராய்ச்சி பல்கலைக் கழகங்களின் குழுவால் மேற் கொள்ளப்பட்டு, 'இந்தி திணிக்கப்படமாட்டாது' என்று அது தகவல் கொடுத்திருக்கிறது: ஆனால் ஒரு கிழமைக்கு முன், இந்தித் திணிப்பு குறித்து தங்கள் பதிலைக் கூறுமாறு பல்கலைக் கழகங்களுக்கு நினைவூட்டும் அஞ்சல் கிடைத்துள்ளது. பல்கலைக் கழகங்களின் மீது இந்தி திணிக்கப்படுவதற்கு முயற்சிக்கப்படுகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும்.

மத்திய அரசாங்கத்தில் ஊழியம் புரிந்துவரும் இந்தி வழங்கப்படாத பகுதி மக்கள் இந்தியை கட்டாயமாகக் கற்றுக் கொள்ள வேண்டுமென விதி இயற்றப்பட்டிருக்கிறது; இந்தி வழங்கும் பகுதியிலிருந்து, இந்தி வழங்கப்படாத பகுதிக்கு அரசாங்க ஊழியம் புரியவரும் அதிகாரிகளின் தன்மை குறித்து நான் அறிய அவாவுறுகிறேன். எனவே தமிழ் பகுதி போன்ற இந்தி வழங்கப்படாத பகுதிகளுக்கு பணிபுரிய வரும் மத்திய அரசாங்க ஊழியர்கள், எந்த மக்களிடை சேவை செய்ய வருகிறார்களோ, அந்த மக்களுடைய மொழியை மட்டுமாவது தெரிந்திருப்பவர்களாகப் பார்த்துக்கொள்ள வேண்டியது இன்றியமையாததல்லவா? இப்பிரச்னையில் அரசாங்கத்திற்கு பொறுப்பு இருக்கிறது.

இந்தியை மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்டிருந்த போதிலும், 'எந்த ஒரு மாநிலத்திற்கும் ஆட்சி



மொழியாக அது இருந்தாக வேண்டும்', என்ற கருத்துக்குச் சிறிதும் இடமில்லை. இப்பிரச்னை பலமொழி வழங்கும் சென்னை மாநிலத்தில், வெளிநாட்டாரால் தீர்த்து வைக்கப்பட்டிருக்கும் முறையை, அவர்கள் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். துவக்க முறையாக இருந்தபோதிலுங் கூட, இங்கு பணிபுரிய வரும் ஆங்கிலேயர்கள் இங்கு வழங்கும் மொழியில் தேர்வு பெற்றாக வேண்டும்.

இந்திய அரசியல் சட்டம் 16-வது விதி, விருப்பமான பணி புரிவதற்கும் அரசாங்க உத்தியோகம் பெறுவதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமை அளிக்கிறது. இந்தியைக் கட்டாயப் படுத்தும் புதிய விதி, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரீட்சைகளில் கலந்து கொள்ள அனைவருக்கும் அந்த வாய்ப்பை அளிக்கிறதா என்று கேட்கிறேன். அரசியல் சட்ட விதிப்படி 1965-ம் ஆண்டு வரை ஆங்கிலம், இந்தி ஆகிய இரண்டும் அரசாங்க மொழிகளென ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது அந்தக்கால கெடுவை மக்கள் சபை கூட்டவும் செய்யலாம்.

எனவே இதுபற்றி இந்திய அரசாங்க உள்நாட்டு இலாக்கா அனுப்பிய சுற்றறிக்கை, அரசியல் சட்ட விதிகளுக்கு முரண்பாடுடைய தாகிறது.

தென் ஆப்பிரிக்கா, கனடா, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் இரண்டும் — இரண்டுக்கு மேற்பட்ட மொழிகளும் ஆட்சி மொழிகளாக ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளன. பிரெஞ்சு, ஜெர்மன் இத்தாலி ஆகிய மூன்று மொழிகளை சுவிட்சர்லாந்து ஒப்புக் கொண்டுள்ளது; ஒரு நாட்டின் ஒற்றுமைக்கும்—மொழிக்கும் ஒருவித தொடர்பும் கிடையாது,

இந்தி பயிற்றுவிக்கப்படுவதையோ, இந்தி பயில மக்களுக்கு வாய்ப்பு தரப்படுவதையோ நான் எதிர்க்கவில்லை. ஆனால் அரசாங்கப் போக்கில் ஒருமைப்பாடு இருக்க வேண்டும் என விரும்புகிறேன்,

பள்ளிகளிலிருந்து ஆங்கிலத்தை அவர்கள் விலக்க வேண்டுமென விரும்புவது, தங்களுக்குப் புறம்பான ஒரு மொழியை மாணவர்கள் கற்பது இயற்கையாகாது' என அவர்கள் உணர்வதினாலேயேயாகும்,

தமிழ், கேரளம், ஆந்திரம் ஆகிய நாடுகளின் சிறார்களுக்கு ஆங்கிலத்தைப் போன்றே இந்தியும் அந்நியமான மொழியல்ல எனக் கொள்ளுவதற்கு, ஏதாவது காரணம் இருக்கிறதா? இம்மாநிலத்தில் எந்தவிதக் குழப்பமும் வளர்ந்து செல்லாத நிலையில் இம்மொழிப் பிரச்னை, திடசித்தத்துடன். இம்மாநில அரசாங்கத்தால் தீர்க்கப்பட வேண்டும்.

இந்தி கற்றுக் கொள்வதற்கு எல்லா சந்தர்ப்பங்களும் தரப்பட வேண்டுமென்ற வாதம் எனக்குப் புரியத்தான் செய்கிறது:

சென்னை பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில், சுமார் 50 அல்லது 60 கல்லூரிகளில் இந்தி இஷ்டப் பாடமாக இருக்கிறது; இந்தி மொழியைக் கற்றுக் கொள்ளும் வசதி கல்லூரி இடைநிலை வகுப்பு, பி. ஏ. வகுப்புகளில் மட்டுமின்றி, உயர்தரப் பரீட்சைகளுக்கும் கூடக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பிருக்கிறது: எனவே இந்தி மொழி அறிவு பெறுவதற்கு எந்தவித விரோதமும் இங்கு காட்டப்படவில்லை. என்பது உணரப்பட்டாக வேண்டும்: ஆனால் இந்திமொழி நம்மீது கட்டாயமாகத் திணிக்கப்படும் போதுதான், இது நியாயம்தானா? என்று நாம் கேட்க வேண்டியவர்களா யிருக்கிறோம்.

எனினும் பண்டித நேரு, பிரதமரா யிருக்கும் வரையில், இந்தி மொழிபற்றி எந்தவிதத் தவறுகளும் நடைபெறாது என்று நான் நம்புகிறேன்.

*

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், டி. எம். நாராயணசாமி எம்.எல்.சி. அவர்கள் பேசியதாவது :—

வட்டார மொழிக்கான தனிக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பது வரவேற்கப்பட வேண்டியது தான்; ஆனால் அதே நேரத்தில், இந்தி மொழி குறித்தும் ஆலோசிக்க வேண்டிய தருணம் இது தான்:

இந்திய அரசாங்கம் மத்திய பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ஆகியவை பரீட்சை மொழியாக இந்தியை மேற்கொள்ளும் திட்டம் குறித்து சென்னை அரசாங்கம் ஒரு உறுதியான முடிவை மேற்கொண்டாக வேண்டும்.

தென்னாட்டின் மீது இந்தியைத் திணிக்க அவர்கள் ஒரு தந்திரமான வழியைக் கையாளுகின்றனர்.

போட்டிப்பரீட்சைகளில் தென்னாட்டு இளைஞர்கள் கலந்து கொள்ள முடியாதவாறு செய்கிற ஒரு கொள்கையை இந்திய சர்க்கார் கடைப்பிடிக்கக் கூடாது;

இந்தியை ஒரு விருப்ப மொழியாக ஏற்றுக் கொள்வதில் எனக்கொன்றும் தடையில்லை' ஆனால் இந்தி, போதனை மொழியாகவோ பரீட்சை மொழியாகவோ ஏற்றுக்கொள்ளப்படக் கூடாது;

வட்டார மொழியிலும், இந்தி மொழியிலும் நாம் கொண்டுள்ள ஆர்வத்தினால் ஆங்கில மொழியின் மதிப்பையும் நாம் மறந்துவிடலாகாது, என்று குறிப்பிட்டார்.

வ. ஆ. மாவட்ட திருவள்ளுவர் கழகங்களுக்கு

ஆம்பூர் திருவள்ளுவர் கழகச் செயலாளர் எஸ். அன்னையன் எழுதுவது, :—

வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள எல்லா நகரங்களிலும், சிற்றூர்களிம் திருவள்ளுவர் பெயரால் நடத்தப்பட்டு வரும் கழகங்கள், படிப்பகங்கள், நூல் நிலையங்கள் அனைத்தையும் ஒன்று கூட்டி "வ. ஆ. மாவட்ட திருக்குறள் மத்தியகழகம்" என்ற ஒரு நிறுவனத்தை ஏற்படுத்த முயற்சி செய்து வருகிறோம்.

எங்களுடைய முயற்சிக்கு வ. ஆ. மாவட்டத்திலுள்ள எல்லா திருவள்ளுவர் கழகங்களும் ஆதரவளித்து ஒவ்வொரு கழகமும் அதன் பெயரையும், அமைப்பையும், அமைப்பாளர்களின் விவரத்தையும் "செயலாளர் திருவள்ளுவர் கழகம் ஆம்பூர் (வ. ஆ. மா) என்ற முகவரிக்கு எழுதி அனுப்பும்படிக் கேட்டுக் கொள்கிறோம்.

அமைந்தகரை

அறிவு இயக்க மன்ற சார்பாக 31-7-55 ஞாயிறு காலை 10-மணிக்கு மன்றக் கட்டிடத்தில் திருவள்ளுவர் விழா திரு அ. இளம்வழுதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் சில தோழர்கள் சொற்பொழிவாற்றினர். இரவுப் பள்ளியில் இலவசமாக படிக்கும் மாணவ மாணவிகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. இறுதியாக செயலாளர் திரு செ கதிரவன் நன்றி கூறலுடன் விழா இனிது முடிவுற்றது.

42

கடைசிக் கதை

✶

குற்றாலத்திலே சேகர் தங்கியிருந்த விடுதிக்கு இன்ஸ்பெக்டர் போய்ச் சேரும் நேரத்திலே அறையைக் காலி செய்துகொண்டு சேகர் தென்காசி ரயில் நிலையத்திலே நின்று கொண்டிருந்தான். சென்னையை நோக்கிப் புறப்பட்ட எக்ஸ்பிரஸிலே சேகர் ஏறி அமர்ந்தான். ஜன்னல் கதவோரமாகக் கை வைத்துச் சாய்ந்து கொண்டே குற்றாலத்தின் திசையை நோக்கினுன். குளுமையைத் தேடி வந்தவர்களைக் குற்றாலத்துக்கு இழுத்துக் கொண்டு டவுன்பஸ் பாதையிலே ஓடிக்கொண்டேயிருந்தது.

குளுமையைத் தேடிவந்த சேகரோ எரிந்த உள்ளத்தோடு வெளியேறிக் கொண்டிருந்தான். அவனது நெஞ்சக் கோட்டத்திலே ஆசைக் கோட்டை இடிந்து தூள் தூளாகிக் கிடந்தது. விடுதியிலிருந்து சேகர் காலியாகி விட்டான் என்பதை இன்ஸ்பெக்டர் கேள்விப்பட்டதும்—வனஜாவின் வீடு நோக்கிப் பறந்தார். வனஜாவைச் சந்தித்து நிலைமையை விளக்கிக் கூறினுர். தன்னைக் கெடுக்க வந்தவன் கொடுவாளால் தாக்கப்பட்டுக்கிடக்கிருன்—என்பதைக் கேள்விப்பட்டதுமே ஒரு திருப்தி ஏற்பட்டது வனஜாவுக்கு! இன்ஸ்பெக்டர் தொடர்ந்து சொன்ன செய்தியைக் கேட்டதும் —அந்த அற்ப திருப்தி கூட அவள் இதயத்திலே நிலைக்காமல் வேதனைக்காடாகியது—உள்ளம்! மரணத்தின் மடியிலேயிருக்கும் தேவதாஸ் ......தன் பாவங்களை உணருகிருன். செய்த கொடுமைகளுக்காக வருந்தி வருந்தி அழுது புலம்புகிருனென்பதைக் கேள்விப்பட்டதும் அந்தப் பெண் இதயம் துடித்தது.

தேவதாஸ் இந்த உலகுக்குப் பிரிவுபசாரம் கூறும் அந்தக் கடைசி நேரத்திலே அவனைப் பார்க்கத் துடித்தாள். எண்ணத்தை இன்ஸ்பெக்டரிடம் தெரிவித்தாள். இன்ஸ்பெக்டரும் அழைத்துச் சென்ருர்.

✱

இரும்புக் கட்டிலிலே புரண்டு கொண்டிருந்த தேவதாஸ்...வனஜாவைக் கண்டதும் லேசாகத் தலையைத் தூக்கினுன்,

'தேவதாஸ்'......என்று கதறினுள் வனஜா. அந்தக் கதறலிலே பாச உணர்ச்சியும் ஒட்டிக் கிடந்தது.

'வனஜா! துரோகபுரிக்கு உன்னை அழைத்துச் சென்றவன் தொல்லைக் குகையிலே படுத்திருக்கிறேன் பார்! ஆணவக்காரனுக்கு அழிவு மேடுதானே புகலிடம். வனஜா! நீ வாழவேண்டும்...நீ விரும்பிய சேகரோடு. அய்யோ! அந்தக் காதல் திலகம்...உன்னை வெறுக்கும் நிலையை உண்டாக்கி விட்டேனே வனஜா! அந்த அன்பு இதயத்தான் உனக்காக ஏங்கி ஏங்கிச்செத்தானே, அவன் இதயம் வீங்கி வீங்கிச் சாக நானல்லவா துணையாகிவிட்டேன் சேகர் எங்கே, வனஜா?

"அந்த உத்தமரைத்தான் அழுத இதயத்தோடு ஊருக்கு ஓடவைத்து விட்டாயே தேவதாஸ். எங்கோ போய் விட்ட சேகர் இங்கே வந்தார்!......எதிர்பாராத நேரத்திலே எதிர் பாராத முடிவையுந்தந்தார். நான் மகிழ்ந்திருந்தேன் என் வாழ்வு பூஞ்சோலையாகுமென்று! ஆனுல் இடையே புகுந்த நீ புழுதிக் காடாக்கி விட்டாயே தேவதாஸ். வருவாரா அந்த உத்தமர்? நீண்ட கடிதமே திட்டி விட்டாரே என்னை வஞ்சகியாகக் கற்பனை செய்து!"

"வருவார் வனஜா—உன்னை வாழவும் வைப்பார். நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன். எப்போதாவது சேகர் உன்னைச் சந்தித்தால் — அப்போது என்னை மன்னித்துவிடும்படி நான் கேட்டுக் கொண்டே செத்ததாகக்கூறு ......என்று பேசிக் கொண்டே கரங் குவித்து வணங்கினுன். தேவதாஸ் பேச்சு தொடரவில்லை மூச்சு மட்டுந்தான் விட்டு விட்டு வந்து கொண்டிருந்தது. பக்கத்திலேயே — அமர்ந்து சிகிச்சைக்கு ஒத்தாசை செய்து கொண்டிருந்தாள் வனஜா.

சேகரை ஏற்றிச் சென்ற எக்ஸ்பிரஸ் திருச்சி சந்திப்பிலே நின்றது. வண்டியை விட்டுக் கீழிறங்கிய சேகர் ஸ்டாலுக்கு முன்னே நின்று சிகரெட்டை வாங்கினுன் அவனை மோதிக்கொண்டு அவசர அவசரமாக யாரோ போவதைப் பார்த்துத் தலையை நன்ருகத் திருப்பினுன். கையிலிருந்த பச்சைக்கைக்குட்டையால் கண்ணைத் துடைத்து விட்டுப்பார்த்தான். ஆமாம் அதே நர்மதாதான். 'நர்மதா' என்று சேகர் குரல் கொடுப்பதற்குள் அவளாகவே திரும்பிப்பார்த்தாள். பக்கத்திலே சேகர் நின்றதைப் பார்த்ததும் திகைத்துத் திரும்பினுள்.

டாக்டர் சேகர்தான். குற்றாலத்தைவிட்டு நேற்றே கிளம்பி விட்டதாகக்கூறினுர். நர்ஸ் நர்மதா—தன் தம்பி தேவதாஸ் குத்தப்பட்டு அபாயகரமான நிலையிலே தென்காசியிலிருப்பதாகக் காலையில் கிடைத்த தந்தியின் மூலமாகத் தெரிந்து. அவனைப் பார்ப்பதற்குப் போவதாகவும் கூறினுள், பக்கத்திலிருந்த — அமுதாவை சேகருக்கு அறிமுகப் படுத்தி வைத்தாள் — அவள்தான் தேவதாஸின் மனைவியென்று!

தேவதாசைப் பற்றியோ-அவனது கதைகளைப் பற்றியோ-சேகருக்குப் புரியாது. குற்றாலத்திலிருந்த போது, தன்னேடு தங்கியிருந்து வாழ்விலே புயலை உண்டாக்கிய அந்தப் பாலத்து வாசிதான் 'தேவதாஸ்' என்ற விபரமே சேகருக்குப் புரியாமலிருந்தது' 'தம்பி தேவதாஸ்' என்று நர்மதா கூறியதும்..., எப்படியோ விபத்துக்கு ஆளான தம்பியைக் காணப்போகிருள் நர்மதா என்றுதான் சேகர் எண்ணினுன். பாலத்து வாசி தான்—தேவதாஸ் என்பது. அவனுக்கு புரியவே புரியாது எனவே, சாதாரணமான நிலையிலேயே யிருந்து 'கொண்டு...' போய்ப் பார்த்து விட்டு. நல்ல செய்தியோடு திரும்பு நர்மதா'...என்று வாழ்த்தி—தானும் விடை பெற்றுக்கொண்டு சென்னையை நோக்கிப் புறப்படத் தயாரான எக்ஸ்பிரஸிலே ஏறி அமர்ந்து கொண்டான்.

நர்மதாவும் வண்டி மாறி தென்காசி நோக்கிப் புறப்படத் தயாரானுள்.

திருச்சி சந்திப்பிலே நடந்த அவர்களது சந்திப்பிலே ஒரு வகைச் சுவையுமில்லை, காதல் நெஞ்சம் காலக் கல்லடி பட்டுக் கனத்துப் போயிருந்தது சேகருக்கு. நர்மதாவுக்கோ தம்பியின் நினைவே வட்டமிட்டுக் கொண்டிருந்தது. இந்த நிலையிலே அவர்கள் ஏறியிருந்த ரயில் வண்டியும் வேறு வேறு திசையை நோக்கி ஓடியது. அவர்களின் எண்ணமும் வேறு வேறு திசையிலே ஓடிக்கொண்டிருந்தது.

தன் அன்பு அக்காள் வந்து விட்டாளென்ற சேதியைக் கேட்டதும் படுக்கையோடு ஒட்டிக் கிடந்த தேவதாஸின் இருண்டு போன முகத்திலே மகிழ்ச்சி மின்னல் வீசியது!

"அக்கா!" என்று அலறிக் கொண்டே கரத்தைக் குவித்தான்.

"தம்பி"...என்ற குரலும் அத்தானென்ற குரலும் போட்டி போட்டுக் கொண்டு தேவதாஸின் காதுகளிலே மோதின. கண்ணைத் திறந்தான்? எதிரே நர்மதாவும்-அமுதாவும் நின்று கொண்டிருந்தனர். அமுதாயென்று அலறிய குரலை, அத்தானென்ற குரல் அடக்கிக்காட்டியது. அமுதாவை இடதுகரத்தால் அணைத்துக் கொண்டே....நர்மதாவைப் பார்த்தான். கண்ணீர் ஆற்றின் கரையிலே அவள் நின்ருள்.

அக்கா...வாழ்க்கைப் பூஞ்சோலையிலே உன்னைப் போன்ற மலர்கள் மட்டுமல்ல — என்னைப் போன்ற மகுடிக்கு அடங்கும் நச்சுப் பாம்புகளும் உண்டு என்பதை எடுத்துக்காட்டி விட்டேனக்கா என் வாழ்வு மூலம். உங்களின் திருமுகத்தைப் பார்த்து விட்டுச் சாகிறேனென்பதிலே மலையளவு திருப்தி! நான் சாவதிலேதான் இப்பேதைய என் இன்பம் ஒட்டிக் கிடக்கிறது: நான் சாகா விட்டாலும்--பிழைத்துக் கொண்டாலும்—சமுதாயத்தின் முன் பயங்கரமான குற்றவாளியான நான் தூக்கு மேடையேறித்தானுக. வேண்டும் அந்தத் தொல்லையெல்லாம் இருக்காது... இன்னும் கொஞ்ச நேரத்திலே கால அரக்கன் என் தீர்ப்பைக் கூறிவிடுவான். அக்கா...இதோ அமுதா—உங்களிடம் ஒப்படைக்கிறேன். எனக்காக இந்த உலகிலேயிருக்கும் ஒரே சொத்து—இதோ இந்த அமுதா...!

...என்று கூறிக் கொண்டே அமுதாவின் பக்கம் திரும்பினுன், அமுதா இப்போது நீ பூரண கர்ப்பிணி...நான் சாகும் நேரத்திலே இந்தத் தேன் செய்தியைக் கேள்விப்படுகிறேன், நல்லது அமுதா உன் வயிற்றில் கருவாகியிருக்கும் என் செல்வத்தை நன்ருக வளர்த்து வாழவை, என்னைப் போல சமூகத் துரோகியாக வளர்த்து விடாதே—ஊரும் உலகமும் அதிசயிக்கும் ஒப்பற்ற அறிஞுக்கு அவனை...நர்மதாதான் இனி உனக்கு எல்லா உறவுக்கும் உரிமையானவர்கள்...!

..."என்று தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டே—அமுதாவை அணைத்தான் நர்மதாவினுடைய கரத்தையும் —அமுதாவினுடைய கரத்தையும் ஒன்று சேர்த்த பிறகுதான்...விட்டு விட்டு வந்து கொண்டிருந்த தேவதாஸின் மரண மூச்சும் அடங்கியது!

மரண ஓலம் அந்தப் பகுதியையே பயங்கரமாக்கியது. தேவதாஸின் காலடியிலே நின்ற நர்மதா கண்ணீர் வடித்து சிலையாக நின்ருள். அவளது நினைவுகள்—தேவதாஸை வளர்த்து, படிக்கவைத்து ...இப்போது பிணமாகப் பார்க்கும் நிலவரை ஓடி நின்றன. அந்தச் சுமைகளை — வேதனையை —தாங்கிக் கொண்டே, பாதை ஓரத்திலே எவ்வளவோ சுமைகளைத் தாங்கிக் கொள்ளும் சுமைதாங்கியைப் போல கல்லாகி நின்ருள் நர்மதா!

(முடிந்தது)

பின்னுரை

துவக்கம் 13—8—54
முடிவு 12—8—55

...இடையே ஒரு முழு ஆண்டு ஓடி முடிந்திருக்கிறது. இந்தக் காலத்துக்குள் சுமைதாங்கியும் தனது கடைசி எல்லைக் கோடடைத் தொட்டுவிட்டு நிற்கிறது. ஓடியது ஓராண்டுதானென்ருலும் பாராண்ட பரம்பரையினரிடமிருந்து வந்து குவிந்த வாழ்த்துகளோ ஏராளம்—ஏராளம்! அக்ரகாரத்து அதிர்வேட்டுகளையும்—அம்மாமி நடையையும் படித்துப் படித்து 'அவாள்' தமிழ் பேசும் நம்மவர்களில் பலர்கூட பாராட்டத்தான் செய்தனர். பாராட்டுரைகளுக்கும்—புகழ் மொழிகளுக்கும் என் நன்றி கலந்த வணக்கம்.

சுமைதாங்கியை எழுதத் துவங்குவதற்கும் முன்னதாக எனக்

11-ம் பக்கம்

ஏஜெண்டுத் தோழர்களுக்கு முக்கிய அறிவிப்பு

● திராவிடன் 9-ம் ஆண்டு துவக்க இதழ் (19—8—55) அதிகப் பிரதிகள் வேண்டுவோர் (15—8—55)-ம் தேதிக்குள் தெரிவித்துவிட வேண்டுகிறோம்.

● ஜுலை மாதம் முடிய நிலுவையை 16—8—55-ந் தேதிக்குள் அனுப்பி வைக்காத ஏஜெண்டுகளுக்கு 9-ம் ஆண்டு துவக்க இதழ் அனுப்ப இயலாது என்பதையும் கண்டிப்பாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—நிர்வாகி—'திராவிடன்'

திராவிடன்

சென்னை : 12—8—55 : வெள்ளி

அபூர்வ ஆராய்ச்சி!

●

தென்னாட்டில் இந்தியைத் திணிப்பதற்காக இந்திமொழி ஆதிக்கக்காரர்கள் செய்துவரும் முயற்சிகள் அனைவரும் அறிந்ததே. எப்படியாவது இந்திமொழியைக் கட்டாயமாக தென்னாட்டவர்கள் மீது திணித்து தென்னாட்டவரை தங்களது நிரந்தர அடிமைகளாக ஆக்கிக் கொள்ள நினைக்கின்றனர் வடவர்கள். அதற்காக அவர்களும், அந்தப் பரீட்சைக்கு இந்தி படிக்க வேண்டும், இந்தப் பரீட்சையை இந்தியில் எழுதவேண்டும் என்று நாளொரு யோசனையும், பொழுதொரு உத்தரவுமாக பிறப்பித்து வருகின்றனர். இதற்காக இந்திக் கமிஷன் என்றொரு கோஷ்டியும் தென்னாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்ய இருக்கிறது.

இவ்விதமாகவெல்லாம் வடவர்கள் எல்லாத் துறைகளிலும் இந்தியைத் திணிக்க முயற்சி எடுத்துக் கொண்டிருக்கும்போது தமிழ் நாட்டில் உள்ள ஒருசில பதவிப் பித்தர்களும் அவர்களது முயற்சிக்கு கைலாகு கொடுத்து வருகின்றனர்.

சென்னை கல்வி அமைச்சர் கனம் சுப்ரமண்யம் அவர்கள் 'அரசியல் சட்டத்தால் மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக மட்டுமேதான் இந்தி ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறதே டல்லாது அதைவிட வேறு ஒன்றுமே கிடையாது" என்று கூறுகிறார்.

அமைச்சர் சுப்ரமண்யம் அவர்கள் கூறுவதைக் கவனியுங்கள். இந்தி மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக மட்டும் இருக்கிறது.

ஆகவே மத்திய அரசாங்க அலுவல்கள் இந்தியிலேயே செய்யப்படும். ஆக மத்திய அரசாங்கத்துக்கும், மாநில அரசாங்கத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டுமானால், மாநில அரசாங்க அலுவல்களும் இந்தியில்தான் நடத்தப்பட வேண்டும். அப்படியானால் மாநில அரசாங்கத்தில் வேலை செய்பவர்கள் இந்தி கற்பது அவசியம், என்று கூறுவதைப் போலத்தான் இருக்கிறது.

உண்மையிலேயே இந்தியைத் திணிப்பது இவர்கள் நோக்கமில்லை என்பது உண்மையானால், ஏன் இவர்கள் 'இந்தி கமிஷன்' என்றும் தூது கோஷ்டி என்றும் மிக அவசரத்துடன் தென்னாட்டுக்கு அனுப்பிக் கொண்டிருக்க வேண்டும்?

ஆட்சி மொழியாக மட்டும்தான் இந்தி இருக்கின்றதென்றால், ஏன் பரீட்சைகளுக்கு இந்தியையும் ஒரு பாடமாக வைக்கின்றனர்?

கல்லூரிகளில் தமிழை போதனா மொழியாக அமைக்க குழு நியமித்துவிட்டு, அதே நேரத்தில் 'இந்தியை போதனா மொழியாகக் கொண்ட தனிக் கல்விக் கூடங்களும் இருக்கக்கூடும்' என்று அமைச்சர் சுப்ரமண்யம் கூறினால், இது உண்மையிலேயே இந்திமொழி ஆதிக்கத்தை எதிர்க்கும் செயல் என்று நம்ப முடியுமா?

இந்தி மொழி போதனா மொழி யாவதற்குரிய தகுதி பெற்றிருக்கிறதா இல்லையா என்பது ஒருபுறமிருந்தாலும் இந்தி மொழி இன்னும் வளர்ச்சி யடையவில்லை என்று நாமல்ல—அவர்களது வட்டாரத்திலேயே ஒரு சிலர் கூறிவருவதை அமைச்சர் கூர்ந்து கவனிக்க வேண்டுகிறோம்.

'இந்தி மொழி இன்னும் அபிவிருத்தி யடையாத நிலையிலிருக்கும்போது இந்தியா ஏன் ஆங்கில மொழியை வெறுக்க வேண்டும்?' என்று பண்டித நேருஜி அவர்கள் கூறியிருப்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஆக இந்தி வளர்ச்சி பெற்றிருக்கிறதோ இல்லையோ அல்லது அபிவிருத்தி யடைந்திருக்கிறதோ இல்லையோ ஆங்கிலத்தைப் போலவே இந்தியும் நமக்கு அன்னிய மொழிதான் என்பதை அமைச்சர் சுப்ரமண்யனார் உணராமல் போனது ஏனோ தெரியவில்லை.

ஆங்கிலத்தைப் போலவே, இந்தி நமக்கு அன்னிய மொழியாயிருப்பினும், இந்தி மொழியை தென்னாட்டவர்கள் வெறுக்கவில்லை என்பது, சென்னை பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் லட்சுமணசாமி அவர்களின் மேல்சபைப் பேச்சின் மூலம் தெரியவரும்.

"சென்னைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில் சுமார் 50 அல்லது 60 கல்லூரிகளில் இந்தி இஷ்ட பாடமாக இருக்கிறது. இந்தி மொழியைக் கற்றுக் கொள்ளும் வசதி கல்லூரி இடைநிலை வகுப்பு, பி. ஏ. வகுப்புகளில் மட்டுமின்றி உயர்தரப் பரீட்சைகளுக்கும் கூடக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பிருக்கிறது. எனவே இந்திமொழி அறிவு பெறுவதற்கு எந்தவித விரோதமும் இங்கு காட்டப்படவில்லை என்பது உணரப்பட்டாக வேண்டும். ஆனால் இந்தி மொழி நம்மீது கட்டாயமாகத் திணிக்கப்படும் போதுதான், இது நியாயந்தானா என்று கேட்க வேண்டியவர்களாகிறோம்" என்று டாக்டர் லட்சுமணசாமி அவர்கள் பேசியுள்ளதிலிருந்து தென்னாட்டவர் இந்தி மொழி வளர்ச்சியைத் தடுக்கவில்லை, அது தென்னாட்டின் மீது கொள்ளவிருக்கும் ஆதிக்கத்தைத்தான் எதிர்க்கின்றனர் என்பது தெரியவரும்.

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் கூறியுள்ளதைப் போன்றேதான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தரான டி. எம். நாராயணசாமி அவர்களும் குறிப்பிடுகிறார், சென்னை மேல் சபையில் அவர் பேசுகையில், 'இந்தியை ஒரு விருப்ப மொழியாக ஏற்றுக் கொள்வதில் எனக்கொன்றும் தடையில்லை ஆனால் இந்தி போதனா மொழியாகவோ, பரீட்சை மொழியாகவோ ஏற்றுக் கொள்ளப்படக் கூடாது' என்று அறிவுறுத்தி யிருக்கிறார்.

இரு துணைவேந்தர்களது கருத்தும் ஒன்றியிருப்பதை அமைச்சர் சுப்ரமண்யனார் அறிந்து கொள்ள வேண்டும்.

இந்தி மொழி கற்க எல்லா வசதிகளும் தென்னாட்டில் இருக்கின்றன. இந்தி மொழி வளர்ச்சிக்கு எந்தவித அதிருப்தியும் இங்கில்லை. ஆனால் கட்டாயமாகத் திணிப்பதைத்தான் தென்னாட்டவர்கள் விரும்பவில்லை என்பதை இரண்டு துணைவேந்தர்களது பேச்சுகள் தெள்ளத்தெளிய விளக்க வைக்கின்றன. இதை அமைச்சர் சுப்ரமண்யனாரும் புரிந்து கொள்ள வேண்டும்.

நிலைமை இவ்வாறிருக்க, இந்தி ஆட்சிமொழியாக மட்டும் இருக்கும் என்று கூறுவதும், பின்பு சர்க்கார் பரீட்சைகளுக்கு இந்தி கட்டாயம் என்று கூறுவதும் முன்னுக்குப் பின் முரணான செய்கை மட்டுமல்ல, முறையற்ற செயலுமாகும் என்பதை அமைச்சர் சுப்ரமண்யனார் உணர வேண்டுகிறோம். மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக மட்டும் இந்தி இருப்பினும், நாள் செல்லச் செல்ல இந்தி வழங்கப்படாத இடங்களில் இந்திமொழி நுழையுமானால் நிச்சயமாக அந்தந்த வட்டார மொழிகள் நசித்தேவிடும்

ஆட்சிமொழி ஆகாததற்கு முன்னரேயே சமஸ்கிருதமொழி தமிழை எவ்வளவு நசித்து வைத்திருக்கிறது என்பதை காலம் உணர்த்தும்போது அமைச்சர் சுப்ரமண்யனார் இவ்விதமெல்லாம் வியாக்கியானங்கள் கூறுவதும், விளக்கங்கள் தருவதும் விவேகமாகாது.

இந்திமொழி வளர்ச்சிக்காக தமிழ் நாட்டில் இவ்வளவு வசதிகளும் வாய்ப்புகளும் இருக்கும்போது, தமிழ்மொழி வளர்ச்சிக்காக வடநாட்டில் என்ன வசதிகளும் வாய்ப்புகளும் இருக்கின்றன? என்று நாம் கேட்டால் அமைச்சர் சுப்ரமண்யனார் என்ன பதில் கூறுவார்.

இந்திமொழி இன்னும் வளர்ச்சி யடையவில்லை ஆனால் அதைக் கட்டாயமாகவும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறினால் என்ன பொருள் எனக் கேட்க அவாவுறுகிறோம்.

தமிழே ஆட்சி மொழியாக வேண்டும் என்ற எண்ணம் தலை தூக்கி நிற்கும் இந்நாளில், அமைச்சர் சுப்ரமண்யம் போன்ற தமிழர்கள், இந்தி மொழி ஆதிக்கம் கூடாது என்று மத்திய சர்க்காருக்கு இடித்துரைக்க முன்வராமல், அவர்களே வடநாட்டு சர்க்காரின் இந்திமொழி ஏஜெண்டுகளாக மாறி "அபூர்வ ஆராய்ச்சி"களில் இறங்குவது தமிழர்களுக்கு' இழைக்கும் மாபெரும் துரோகம் என்று கூறின் மிகையாகாது.

இறுதியாக அமைச்சர் சுப்ரமண்யனார் அவர்களுக்கு ஒன்று நினைவூட்டுகிறோம் தென்னாட்டில் வளர்ந்துள்ள இந்தி மொழி ஆதிக்க எதிர்ப்பு சக்தி மிகச் சாமான்யமானதல்ல. அதைச் சுலபத்தில் அடக்கி மத்திய சர்க்காரின் சபாஷ் பட்டத்தை பெற்றுவிடலாம் என்று அமைச்சர் சுப்ரமண்யனார் போன்றவர்கள் கருதினால் அவர்களுக்கு வரலாறு கூறும் முடிவையே காணிக்கையாக்குகிறோம்.

1938-ல் இந்தி நுழைக்கப்பட்டது.—தோற்று ஓடினது. மீண்டும் 1948-ல் இந்தி நுழைக்கப்பட்டது—புறமுதுகிட்டு ஓடினது,

ஆக 1938-ல் ஓடிப்போன இந்தி, 1948-ல் ஓடி ஒளிந்த இந்தி மீண்டும் தலைகாட்டுகிறது; இம்முறையும் அம்மொழி ஆதிக்கம் செலுத்த விரும்பினால் என்ன நேரும் என்பதை நாமல்ல—மக்கள் சக்தி தீர்ப்புக்கூற காத்துக்கொண்டுதானிருக்கிறது என்பதை அமைச்சர் சுப்ரமண்யனார் போன்றவர்கள் தெரிந்து கொள்வது மிகமிக முக்கியம்.

●

நடக்க இருப்பவை

திரு. வி. க. பிறந்த நாள் விழா

14—8—55 ஞாயிறன்று சென்னை பெரம்பூர் பாரக்ஸ் திரு. வி. க. மறுமலர்ச்சி மன்ற சார்பில் விழா நடைபெறும். காலை 7 மணிக்கு பெரம்பூர் சரஸ்வதி டாக்கிஸ் அடுத்துள்ள மன்ற அலுவலகத்தில் தோழர் ஜி. முனுசாமி அவர்கள் தலைமையில் இசை விருந்தும் பன்மொழிப் புலவர் அப்பாதுரையார், ஜி. செல்வபதி செட்டியார், எஸ். பக்கிரிசாமிப் பிள்ளை, எம். எல், ஏ. ஆகியோரின் சொற்பொழிவுகளும் 12 மணிக்கு தோழர் தி. சு. நல்லதம்பி அவர்கள் தலைமையில் ஏழைகளுக்கு அன்னமளித்தல் ஆகிய நிகழ்ச்சிகளும்,

மாலை 6 மணிக்கு சூளை கான்ரான்ஸ் மித்நகர் மைதானத்தில் (திரு. வி. க. திடல்) தோழர் க. வரதன் அவர்கள் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டமும் நடைபெறும். அதுசமயம் தோழர்கள் என், வி. நடராசன், கவிஞர் கண்ணதாசன், பி. சி. கல்யாணசுந்தரம் பி. சி. சி., வளையாபதி முத்துகிருஷ்ணன், டி. எஸ். சண்முகம், கதிர். சுப்ரமண்யம் பேசுவர்.

கடலூர் நகர தி. மு. கழகம்

14—8—55 ஞாயிறு மாலை 3 மணிக்கு கடலூர் நகர தி. மு, கழக செயற்குழு கூட்டம் கடலூர் ஓ. டி. 1 வது வட்ட தி. மு. கழக அலுவலகத்தில் தோழர் கே. ஜீ. சாமிநாதன் தலைமையில் நடைபெறும். அதுபோது மாநில மாநாட்டு நிதிக்கு கடலூர் நகர தி. மு. கழகம் தன்னுடைய பங்கினை செலுத்துவது பற்றி முடிவு செய்யப்படும். எனவே நகர தி, மு. கழக செயற்குழு அங்கத்தினர்கள் அனைவரும் இதனையே அழைப்பாகக் கொண்டு தவறாது கலந்து கொள்ளுமாறு துணைச்செயலாளர் கே. இளங்கோ அறிவிக்கிறார்.

வண்ணை கே. எஸ். பாண்டியன் படிப்பகம்

14—8—55 ஞாயிறு இரவு 8 மணிக்கு படிப்பக பணிமனையில் தோழர் பி. எம். இராமையா அவர்கள் தலைமையில் 'புரட்சி' என்ற பொருள் பற்றி உறுப்பினர்கள் பேசுவர்.

குஜிலியம்பாறை தி. மு. கழகம்

16—8—55 மாலை 6-30 மணிக்கு குஜிலியம்பாறை பாண்டியனார் திடலில் தோழர் ஆர். தனுஷ்கோடி தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் தோழர்கள் எம். கே. எ. சாமி மற்றும் பலர் பேசுவர், அன்றிரவு வி. ஜி. சாமி தலைமையில் பிரச்சார நாடகமும் நடைபெறும்.

இலங்கைத் தீவிலே அந்த சாஸ்திரியார்!

புராண காலத்தைப்பற்றி எண்ணத் துணிந்து விட்டால் அந்தக் காலத்தின் கருத்தும்—மொழியும்—அதன் பால் பட்ட மக்கள் வாழ்க்கையும் எந்த நிலைமையில் இருந்திருக்கும்? எது உண்மை? என்ற கேள்வி எழும்புகிறது.

அந்தக் காலத்திலே—இன்று நடக்காத செயல்—நடக்க முடியாத கேலிக்குரிய கருத்தோவியங்களை தாங்கிப் புறப்பட்ட புராண ஏடுகள் பல. அவைகளில் இன்று நாட்டிலே நடமாடிக் கொண்டிருக்கும் முக்கியமான ஏடுகள் ‘கம்ப ராமாயணம்’—‘மகா பாரதம்’—‘பாஞ்சாலி சபதம்’ இன்னும் சில.

இன்றைய அறிவியல் தன்மையிலே—என்றோ நடந்ததாகக் கூறப்படும் பல கட்டுக் கதைகளையும்—நம்பத்தகாத நிகழ்ச்சிகளையும் சிந்தித்துச் சீர் தூக்கிப் பார்க்க முற்பட்டு விட்டோம்.

முகவை. கலைக்கதிர்

ஏற்கும் கருத்துக்களை ஏற்கிறோம். ஏற்க முடியாதவற்றை தயவு தாட்சண்யமின்றி, எவருடைய எதிர்ப்புக்கும் அஞ்சாது தேவையில்லை என்று கூறுகின்றோம்—ஒதுக்கித் தள்ளி விடுகின்றோம்!

இப்படிப்பட்ட சூழ்நிலை வளர்ந்துள்ள இந்தக் காலத்திலுங்கூட வைதிகபுரியினர் தங்களின் சுயாலப் புத்தியை வேறுநாடு சென்று காட்டுவதற்கு அஞ்சியது கிடையாது. வரவேற்பு கிடைக்கும் நாடு—இடம் எது என்பதையும் அவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்!

இலங்கையைப் பொறுத்தளவிலே ஜாதி—மதம் இவைகளை தன்னகத்தே கொண்டு—அதை வளர்க்க வேண்டுமென்ற ஆசைத் துணிவிலே தலைக்கேறிய வெறி பிடித்தவர்களும் சிலர் உண்டு! எனவேதான், துரைசாமி சாஸ்திரி போன்றோர்கள் இலங்கைத் தீவிலே தாராளமாக உலவ முடிகிறது.

1954-ல் இலங்கைத் தீவு வந்திருந்த சாஸ்திரியார் மதப் பித்தர்களுக்குப் புதுப் புராணத்தைக் காட்டிச் சென்றார் அது தான் “ஆனந்த ராமாயணம்” ஆனந்தமாக அனுபவிக்க!

வால்மீகியார் காட்டிச் சென்ற வழிக்கும் கம்பர் வகுத்துச் சென்ற பாதைக்கும் முரண் பாடான கருத்தை தரக்கூடியது “ஆனந்த ராமாயணம்”.

மூன்று ராமாயணங்களையும் ஒன்று கூட்டி பரிசிலனை செய்யத் துணிந்தால் இதில் எதுவுமே உண்மையில்லை என்ற துணிப்பான முடிவுக்கு எந்தப் பண்டிதர்களும் அறிஞர்களும் வராமலிருக்க முடியாது.

துரைசாமியார் சொல்லுகின்ற கருத்துக்களைப் பற்றிக் கூட நமக்கு அக்கரை இல்லை. சொல்லுகின்ற கருத்தை கால அளவையாவது எண்ணிச் சொல்ல வேண்டாமா?

1954-ல், சிங்களத் தீவிலே வாழ்கின்ற தமிழர்களுக்கு ஆனந்த இராமாயணத்தின் “அழகு கருத்துக்களை”ப் போதித்துச் சென்ற அன்பர் துரைசாமி சாஸ்திரியார் இம்முறை வருகையின் போது ‘புதுக்கருத்தை’ தெளித்திருக்கிறார் இதோ:

“பாஞ்சாலி அடுக்களையில் வீற்றிருந்தாளாம்—எங்கெல்லாமோ சுற்றி விட்டு விடு வந்த கிருஷ்ண பரமாத்மாவுக்கு தண்ணீர் தாகமும்—பசியும் அதிகரித்து விட்டதாம். தங்கையிடம் சென்று (பாஞ்சாலியிடம்) தங்கையே! எனக்குப் பசியும்—தாகமும் அதிகரித்து—களைப்பாக இருக்கிறது ஒரு கப் சூடான ‘கோபி’ போட்டுக் கொடு என்றாராம்.”

நண்பர்களே! சாஸ்திரியார் உதிர்த்த அந்த மெய்ப் பொருளை மீண்டும் ஒரு முறை படித்துப்பாருங்கள்! சிந்தியுங்கள் வேடிக்கை தோன்றும்.

கிருஷ்ண பரமாத்மா ஆங்கிலத்திலே பேசியது ஒரு வேடிக்கை! அதுவும் கப்பில் சூடான கோபி கேட்டது (காபி இல்லை) அதை விட பெரும் வேடிக்கை!

ஆங்கிலம் எவ்வளவு அழகான முறையில் மேலை நாட்டு உச்சரிப்புடன் பேசி இருக்கிறார் தோழர் கிருஷ்ண பரமாத்மா பார்த்தீர்களா,

ஆங்கிலேயன் வந்த பிறகுதானே இந்த நாட்டிலே ஆங்கிலம் பரவ ஆரம்பித்தது' ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளாகின்றன. கிருஷ்ண பரமாத்மா வாழ்ந்த காலமெனச் சொல்லப்படுவது நம்பத்தகாத புராண காலம்! வரலாறு அறிந்த சாஸ்திரியார் வாய்மை மறந்ததேனோ!

குழைந்து, வளைந்து நடித்துக் காட்டிப் பேசும் சாஸ்திரியார் கால அளவு—கருத்துப் பொருத்தம் இப்படிப்பட்ட தன்மைகளை மறந்தது ஏனோ! அல்லது இங்கு வாழ்கின்ற மக்களெல்லாம் சிந்தனையற்றவர்கள் என்பது அவரின் கருத்து போலும்!

துரைசாமி சாஸ்திரியார் போன்றவர்களின் பத்தாம்பசலிப் பிரச்சாரம் இந்த நாட்டிலே நுழைய முடியாது துரத்தியடிக்கப்பட வேண்டிய காலம் வெகு விரைவில்வந்து கொண்டிருக்கிறது என்பதை நினைவுறுத்த ஆசைப்படுகிறேன். மதவாதிகளும் — மதக் கருத்துக்களும் எந்த நாட்டில் நிலைபெறுகிறதோ, அந்த நாடு நல்ல பல கருத்துக்களுடன் வளப்பமுடன் வாழ முடியாது என்பதை எண்ணிச் சிந்தித்துச் செயல் புரிக!

ரத்த பாசமோ

“கிழக்கு உத்தரப் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட பிரதேசங்களை விமானத்தில் சென்று பார்வையிடுவதற்காக இன்று காலை புது டில்லியிலிருந்து லட்சுமண்புரிக்கு பிரதமர் பண்டித நேரு வந்து சேர்ந்தார்” இது இம்மாதம் 6ந் தேதி பத்திரிக்கைச் செய்தி.

உத்தரப் பிரதேசத்தில் வெள்ளம்—வீடுகள் அடித்துச் செல்லப்படுகின்றன. குடிசைகள் நீரில் மூழ்கின. எங்கும் தண்ணீர் மயம் நேருவுக்கு செய்தி தெரிவிக்கப்பட்டது. உடனே கிளம்பினார் விமானம் மூலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட! கூட்டத்தில் பேசுகிறார். பதைக்கிறார். துடிக்கிறார்.

இங்கும் தான் தஞ்சையிலும் திருச்சியிலும் புயல் அடித்தது. வீடுகள் சரிந்தன. மரங்கள் வேரற்று வீழ்ந்தன. போக்குவரத்து ஸ்தம்பித்தது. ரோடுகள் நாசமாயின ஏராளமான சேதம் விளைந்தது! உடனே சென்னை சர்க்காருக்கும் மத்திய சர்க்காருக்கும் செய்தி தெரிவிக்கப்பட்டது. பிரதமர் நேரு புயலால் பாதிக்கப்பட்ட இடங்களை வந்து பார்வையிடாவிட்டாலும் அனுதாபத்துக்காக ஒரு வார்த்தையாவது கூறினாரா? இல்லையே! ஆனால் அப்போதும் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தி. மு. கழகம்தான் பணம் திரட்டி நிதி உதவி அளித்தது. பண்டித நேருவிடமிருந்தோ மற்ற மத்திய சர்க்கார் மந்திரிகளிடமிருந்தோ ஒரு சாதாரண அனுதாபம் கூட வரவில்லை.

ஆனால் இப்போது உத்தரப் பிரதேசத்தில் வெள்ளம். ஓடுகிறார் ஊரான வந்த நேரு பண்டிதர். இதயம் துடிக்கிறார். ஏன், அது அவரது சொந்த மாகாணம், தான்பிறந்த மாகாணம், உடல் துடிக்கிறது. இருக்காதா இரத்த பாசம். ஆகையால்தான் விமானத்தில் சென்றே வெள்ள நிலைமையைக் கவனிக்கிறார்.

இங்கும்தான் சிலதுகள் உள்ளன. வடநாடாவது தென்னாடாவது என்று பேசிக் கொண்டு. இதற்கு என்ன சொல்கின்றனர் ஏக இந்தியா பேசும் ‘அரசியல் வேதாந்தி’கள் என்ன சொல்லப்போகின்றனர் இதற்கு.

தன் இனத்தவர் வசிக்குமிடத்தில் வெள்ளம்—ஓடுகிறார் பண்டித நேரு.

தமிழ் நாட்டிலே கடும்புயல்—எங்கிருந்தார் பண்டித நேரு!

வடநாடாவது-தென்னாடாவது எல்லாம் ஏகஇந்தியாதான் என்று கூறும் ‘அகில இந்திய’க் கண்ணோட்டக்காரர்கள் இதற்கென்ன சொல்லப் போகிறார்களோ யாமறியோம்.

—சோமு

ஆடுவோமே பள்ளு பாடுவோமே!

அவசரச் சட்டம் ஒன்றைப் பிறப்பித்திருக்கிறாராம் கவர்னர் பெருமான்! அவசரச் சட்டம் நிலத்தினின்றும் வெளியேற்றப்படும் ஏழை விவசாயிகளுக்காகவோ டார்ஜிலிங் தோட்டத் தொழிலாளர்களின், கான்பூர் மில் தொழிலாளர்களின் உரிமையை நிலைநாட்டியோ, அல்லது நாட்டிலே நடமாடும் வேறெந்தப் பிரச்னைக்காகவோ அல்ல!

“எடு துப்பாக்கியை! சுடு! உதை! கொல்லு! சிறையில் தள்ளு! சந்தேகப்பட்டால் சவுக்கடி கொடு! என்று ஆணை யிடுவதற்காக அவசரச் சட்டம்!

ஆகஸ்டுப் போராட்டங்களைச் சமாளிக்க இந்த முறையிலே கவர்னர் ஆணை பிறப்பித்திருப்பாரோ! என்று நினைக்க வேண்டாம்! அவசரச் சட்டம் இங்கல்ல அஸ்ஸாமில்! அஸ்ஸாம் கவர்னர் இப்பேய்ச் சட்டத்தை நடத்த அனுமதித்திருக்கிறார்!

நாகநாடு தனிநாடாக வேண்டும் என்ற கிளர்ச்சி வலுத்து வருகிறது அங்கே! அமெரிக்க சுதந்திரப் போரில் சுதந்திர சாஸனத்தைப் பிரகடனப் படுத்தியதுபோல் நாகர் போராட்டக் குழுவும் சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டு விட்டனர்! டெல்லியின் பிடிப்பு எங்களுக்கு வேண்டாம் என்று பறையறைந்து விட்டனர்.

என்றாலும் இந்திய அரசாங்கமும், பர்மிய அரசாங்கமும், அதை ஒப்புக் கொள்ள மறுத்தன! அதனால் பிரம்மாண்டமான கிளர்ச்சிகள் அங்கே நடாத்தப் படுகின்றன சுதந்திரத்திற்காக புரட்சியில் இறங்கி யிருக்கின்றனர் நாக நாட்டு மக்கள்! புரட்சி பயங்கரமாக உருவெடுத்து வருகிறது இரு அரசாங்கங்களின் உடும்புப் பிடியால்!

விடுதலைக்காகப் பாடுபட்டுக் கிளர்ச்சி புரியும் அந்த வீரர்களைத்தான் சுட்டுப் பொசுக்குங்கள்! அடியுங்கள், சித்ரவதை செய்யுங்கள் என்று அனுமதிக்கும் சட்டத்தை—அல்ல—அவசரச் சட்டத்தைப் பிறப்பித்திருக்கிறார் அஸ்ஸாம் கவர்னர்!

அவசரச் சட்டமா இது ஆட்கொல்லிச் சட்டமல்லவா?

அகிம்ஸா ஆட்சி என்ற பெயர்! அசோகச் சக்கரத்தின் கீழே ஆட்சி! சுதந்திரத்தின் லட்சணம் நன்றாக இருக்கிறதல்லவா?

அக்கிப்பேட்டை தி. மு. கழகம்

பெங்களூர் நகர் அக்கிப்பேட்டை தி. மு. க. செற்குழு கூட்டம் 7-8-55 ஞாயிறு அன்று மாலை 8-மணிக்கு திரு. வி. கே. நடேசன், தலைமையில் நடைபெற்றது. அதுச்சமயம் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அக்கிப்பேட்டை தி. மு. க. தோழரான திரு. எஸ் வி. பதி அவர்கள், பெங்களூர் மாவட்டச் செயலாளராக, தேர்ந்தெடுக்கப் பட்டமைக்காக இக்குழு தனது மட்டற்ற மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கிறது.

அக்கிப்பேட்டை தி. மு. க. பார்பாக 17-7-55-ல் நடைபெற்ற பொதுச் செயலாளர் வரவேற்பு பொதுக்கூட்ட வரவு செலவு கணக்குகள் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. மொத்த வரவு 272-4-0. மொத்த செலவு 27-2-0 மாநில மாநாட்டு நிதிக்காக அக்கிப்பேட்டை தி. மு. கழகம். 25-0-0 ரூபாயும் மற்றும் பல மன்றங்கள் சார்பாகவும் நிதி கொடுக்கப்பட்டது. ஆக மொத்தம் 103-2-0 மாநில மாநாட்டு நிதிக்காக பொதுக்கூட்டத்தில் கொடுக்கப்பட்டது.

ஏ. எல். சி. கிருட்டிணசாமி சுற்றுப் பயணம்.

ஆகஸ்டு. 13. குன்னத்தூர் 14. பழையபாளையம், 15, பெர்னமல்லூர்; 18. வங்கனூர். 19. குருராஜப்பேட்டை 20. திருவத்திபுரம் 21. ஆம்பூர், 22. கார்க்கூர்.

கேள்வி? பதில்.

—அஞ்சாநெஞ்சன்—

கே: அக்காலத்திலேயே பல புலவர்கள் கடவுளை நிந்தித்திருக்கும் போது நம்மீது இன்று கோபப்படுவோரை என்னவென்று சொல்லலாம்!

—மே. ச். உலகநாதன், ஈரோடு

ப: இன்னும் மனவளம் பெருத—விளக்கம் அறியாத— பரிதாபத்திற்குரியவர்கள் என்றுதான் அவர்களைச் சொல்லலாம்.

*

கே: இந்தி ஆதிக்கத்தை எதிர்க்க தி. மு. கழகம் போராடுமா அப்படியானுல் அத்திட்டம் என்னவென்று சொல்ல முடியுமா!

—எம். ராசன், சிதம்பரம்

ப: இந்தி ஆதிக்கத்தை தி. மு. கழகம் ஏற்கனவே எதிர்த்திருக்கிறது. எதிர்த்தும் வருகிறது. அதற்காக தீவிரக் கிளர்ச்சியில் ஈடுபடவேண்டிய சமயம் நேரிடும்போது திட்டத்தைப் பற்றி தி. மு. கழகம் தெரிவிக்கும். அதுவரை யாரையும் ஆருடம் கேட்க வேண்டாம் தோழரே.

*

கே: இப்போது உங்கள் தி. மு. கழகத்திற்குத் தலைவர் யார்!

—எஸ். தணிகாசலம், கோவை

ப: தோழரே நீங்கள் அரசியலை எவ்வளவு கண்ணுங் கருத்துமாக கவனித்து வருகிறீரய்யா—தி. மு. கழகத்தின் பொதுச் செயலாளர்தான் தி. மு. கழகத்தின் தலைவர்.

*

கே: பயத்தால்தான் உங்கள் கண்ணீர்த்துளி கட்சி கொடி எரிப்புப் போராட்டத்தில் கலந்துகொள்ளவில்லையென்று நான் உறுதியாகக் கூறுகிறேன். நீங்கள் என்ன சொல்ல முடியும்!

—அன்புமணி, திருச்சி

ப: கூறுங்கள் இன்னும் உறுதியாகக் கூறுங்கள். பயித்திரக்கார விடுதியிலிருந்து கொண்டு இதுதான் எனக்கு ஏற்ற இடமாகயிருக்கிறது. வெளியே இருப்பவர்களைப் பார்த்தால் எனக்கு பயித்தியக்காரர்களைப் போல தோன்றுகிறது. ஆகவே பயித்தியக்கார விடுததான் நிகரற்ற பூங்கா என ஒருவர் உறுதியுடன் கூறினல் அந்த மனிதரிடம் வாதம் புரிவது விவேகமாகாதல்லவா? ஆகவே உமது எண்ணத்தைக் குறித்து நான் ஒன்றும் கூறுவதற்கில்லை.

*

கே: வரும் பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் போட்டி போடப் போவது நிஜம் தானு!

—டி. சந்திரன், வடசென்னை

ப: மாநில மாநாடு உங்களின் கேள்விக்குப் பதில் கூறும்.

*

கே: ஜவர்லால் நேருவைப்போல தென்னுட்டிலுள்ளவர்கள் யாராவது புகழ் அடைய முடியுமா!

—கே. ஜம்புநாதன், ஆற்காடு

ப: திராவிடம் தனியரசு உரிமைப் பெற்ருல் தென்னுட்டு அரசியல் மேதைகளுக்கு இணையாக வடநாட்டில் எவரும் இல்லையே என்று நீங்கள் மட்டுமல்ல அகில உலக அரசியல் அரங்கே கூறும்.

*

கே: அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி உயிரோடிருந்தால் உங்கள் தி. மு. கழகமாகிய கண்ணீர்த்துளி கட்சியில் சேர்ந்திருப்பாரா!

—டி. ஆளவந்தார், கோவை

ப: அய்யா ஆளவந்தாரே—உமது சந்தேக வியாதிக்கு காந்தி ஜோசியரிடத்தில் ஆருடம் கேளும்.

*

கே: ராஜாஜியின் ஊசிதடுப்புப் போராட்டம் வளர்ந்து கொண்டே போகிறதே—ஏன்!

—டி. எல். லிங்கம், காஞ்சி

ப: ஆச்சாரியாருக்கு பார்ப்பன பத்திரிகைகளின் பக்கபலமிருக்கும்போது இதில் ஆச்சரியம் ஒன்றுமில்லையே.

பிறப்பு

தாரை வட்ட தி. மு கழகப் பொருளாளரும் ஊராண்மைக் கழகத தலைவருமான பெரியார் கே. எஸ். சிரங்கராயர் அவர்களின் மகன் திரு. கே. எஸ். பெரியசாமி அவர்களின் துணைவியாருக்கு 6-8-55 இரவு 8-20 மணிக்கு ஆண்குழந்தை பிறந்தது. தாயும் சேயும் நலம். இதன் காரணமாக திராவிடன் வளர்ச்சிக்கு ரூபாய் ஒன்று அனுப்பப்பட்டது. வரப்பெற்ருேம். நன்றி—நிர்வாகி.

உதிர்த்த மலர்!

○

உருவகச் சித்திரம்

மாலைப்பொழுது; சோலைக்குச் சென்றேன்! விழிக்கு அழகு காட்டி சோர்ந்த உள்ளத்திற்கு மருந்தூட்டி நின்று கொண்டிருந்தாள் அந்த வண்ண முகத்தழகி! நானும் சிரித்தேன்; அவளும் சிரித்தாள்—என் உதடுகள் துடித்தன.

—"கருநிறத்தான் காதலியே! கலப்பு மணத்தின் எடுத்துக் காட்டே! காதலன் தூரத்தில் வரக்கண்டதும் மடிவிரித்து மஞ்சமாக்கி...அவனை படுத்துறங்கச் செய்யும் பாவையே! காதலன் இசை பாடினல் அதை இன்ப கீதமாக அனுபவித்து அவனை அணைத்து முத்தமிடும் இன்பவல்லியே! அவன் ஆசைக்கு விருந்தாகி, காதலுக்கு மருந்தாகி நெஞ்சோடு நெஞ்சம் புதைத்து கொள்ளை கொள்ளையாக இன்பம் அள்ளித் தருபவளே! மயக்கும் அழகியே மங்கையின் கூந்தலில் குடியேறும் நல்லாளே! தென்றல் தவழ்ந்தாலே தேடிவந்து திகட்டாத மணம் திரட்டித் தரும் எழிலரசி! தொட்டாலே துவளும் மெல்லியலாளே! கண்டாலே சுவையூட்டும் தேன் குடமே! காதல் தூது செல்லும் தூயவளே! ஆண்டவனைக் கண்டதுண்டா நீ? அவனென நம்பி சிலையின் கழுத்தை அலங்கரிக்கிருயா? ஆலயம் நுழைந்தாயே! அங்கு அர்ச்சனையெனக் கூறி அள்ளி எறியப் படுகிருயே அனுவசியமாக! அதுகண்டு ஆத்திரம் கொள்ளாமல் மனத்திற்குள்ளே மட்டும் சிரிக்கும் அறிவரசி! உன்னை விரும்பாதார் யார்?

அரசனும் விரும்புகிருன்; ஆண்டியும் விரும்புகிருன். திருமண வீட்டில் சோபிதம் தருபவள் நீ! மரித்தவன் வீட்டிலும் மரியாதை யுண்டுனக்கு! விஷப் பாம்பையும் உள்ளுள் அடக்கியாளும் வீரப் பெண்ணே! வெற்றி கொண்ட வீரனின் கழுத்தைத் தழுவி சுகம் காணும் சுந்தரி! கவிஞன் சிந்தைக்கினிப்பூட்டும் சிங்காரி! சோலைக்குச் சொந்தக்காரி! இளம் காதலர்கள் இன்ப ரகசியம் பேசும்போது ஒட்டுக் கேட்டாலும் ஒருவருக்கும் சொல்லாமல் ஊமைபோல் விளங்கும் ஒய்யாரி! ஏழையென்றும் அடிமையென்றும் ஜாதியென்றும் பேதமின்றி இன்ப வாசனை வாரி வழங்கும் உத்தமி!—என்று வான்பரிதி மாலை நேரத்தில் அள்ளித் தெளித்த தங்க கதிர்களால் 'தகதக'வென ஜொலித்த மங்கை நல்லாளை வாயாரப் புகழ்ந்தேன்—விடியும் வரை!

......அய்யய்யோ! ஏன் திடீரென்று மயங்குகிருள்? சிரித்த முகத்துக்காரி சிதைந்து விட்டாளே! மகிழ்ச்சியால் மலர்ந்தவளே! மரணத்தைக் கட்டியணைத்துக் கொண்டாயோ என்று கண்ணீர் விட்டேன்.

"ஏ மனிதனே! என்னைப் புகழ்ந்தவனே! ஏன் கண்ணீர் விடுகிருய்? நான் மடிந்தாலும் என் புகழ் மடியாது! என் பின் சந்ததிக்கு மாண்பு தருமே! உனக்குத் தெரியுமே நன்ருக! உன் மனிதக் கூட்டத்திற்குச் சொல்! புகழோடு சாகச் சொல்! என்று அந்த உதிர்ந்த மலர் சொல்லிவிட்டு கண்முடிக் கொண்டது!

—கீழுவைப்பாறு, மாறன்

வளர்ச்சி

கடந்த டிசம்பரில் இந்திய சர்க்கார் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றுவர இந்திய நல்லெண்ணத் தூதுக்குழு ஒன்றை அனுப்பி வைத்தனர். எண்மர் அடங்கிய அந்தக் குழுவிலே படாதிபதி ஏ. ஆர். கர்தார் அவர்களும் இருந்தார். அவர் இந்தியாவிற்குத் திரும்பிய பின்னர் சமர்ப்பித்த அறிக்கையில் கீழ்வரும் ருசிகர தகவலும் அடங்கியுள்ளது.

1951-ல் இரானில் (Iran) 60 சினிமா கொட்டகைகளும், சிரியாவில் 53 சினிமாக் கொட்டகைகளும், லெபனுனில் 53 சினிமாக் கொட்டகைகளும், துருக்கியில் 234 சினிமா கொட்டகைகளும், எகிப்தில் 260 கொட்டகைகளும் இருந்தன. இன்று அவை முறையே 102, 95, 80, 350, 360 என்று வளர்ச்சியடைந்துள்ளது.

சினிமாக் கொட்டகைகளில் அமர்ந்து படக்காட்சிகளைப்பார்க்கும் ரசிகர்களுக்கு அன்றும் இன்றும் செய்து தரப்பட்ட இடவசதி கீழ் வருமாறு:

தேசம்	1951-ல்	1955-ல்
சிரியா	25,700	60,000
லெபனுன்	30,000	58,000
துருக்கி	138,000	240,000
எகிப்து	255,000	375,000

ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட ஐந்து நாடுகளிலும் சினிமா வளர்ச்சியைத் தடுத்திடும் வகையில் எவ்வித தடையும் விதிக்கப்படுவதில்லை. அதற்குமாருக சகல வசதிகளுடன் தற்கால முறையில் தியேட்டர்களை நிர்மாணிக்க தனியார் முயற்சி எடுக்கும் பட்சத்தில் அரசாங்கம் அத்தகையவர்களுக்கு ஊக்கம்தரத் தயங்குவதில்லையாம்.

டைரக்டர் மெஹ்பூப் தயாரித்த 'ஆன்' என்ற படம் எகிப்து நாட்டிலே திரையிடப்பட்டுக் காட்டப்பட்ட ஓராண்டு காலத்திலே வசூலான தொகை சுமார் ஆறு லட்ச ரூபா என்றும், படம் தயாரிக்கப்பட்டுவந்த காலத்தில் அவசியத்தின் காரணமாய் மெஹ்பூப் ஒன்றரை லட்சத்திற்கு வெளிநாடுகளிலே படத்தைத் திரையிடும் உரிமையை வி. வி. பூரி என்ற விநியோகஸ்தருக்கு விற்றுவிட்டாரென்றும் சொல்லப்படுகிறது. மேற்கொண்டு சுமார் ரூ. 12 லட்சம் வசூலாகும் எகிப்தில் மட்டும் மேலும் இரண்டாண்டுகளுக்குப் படம் ஓடினல், என்று கர்தார் குறிப்பிட்டுள்ளார். இப்போதும் எகிப்திலே 'ஆன்' சக்கைபோடுபோட்டு வருகிறதாம். ஒருமுறை பார்த்த ரசிகரே பலமுறை மீண்டும் சென்று பார்க்கிருராம். இந்த அளவு வசூல் மற்ற மத்திய கிழக்கு நாடுகளிலும் கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை.

—கஜா

●

திராவிடன் வாசகர்களுக்கும்
ஆதரவாளர்களுக்கும்

*

9-ம் ஆண்டுத் துவக்க
அன்புக் காணிக்கை

*

19—8—55 அன்று திராவிடன் புத்தம் புதிய அம்சங்களைத் துணையாகக் கொண்டு தனது 9-ம் ஆண்டுப் பயணத்தைத் துவக்குகிருன்.

எனவே அத்துவக்க நாளிலே திராவிடன் தரயிருக்கும் அரிய கருத்து விருந்தினைச் சுவைக்க அனைவரையும் மனமார அழைக்கிறோம்.

டி. கே. சீனிவாசன்	கௌதமன்	க ஜா
இராதாமணாளன்	தில்லை மறைமுதல்வன்	அண்ணா அன்பன்
இரா. இளஞ்சேரன்	மு. சண்முகம்	ஆசிரியோரின் எண்ணக் குவியல்களுடன்.

மா. தங்கவேலரின் கற்பனைச் சித்திரம் **"பாலைவன ரோஜா"** (தொடர் நாடகம்)

திருவேடம் தீட்டும் **"புறப்படுவோம் பஞ்சாப்"** என்னும் அரசியல் (தொடர்) கட்டுரை

ஆகியவைகளும் நக்கீரனின் சிறப்பு கட்டுரை கவிதை—குறிப்பிடதக்க படங்கள்—தி. மு. கழக பொதுக்குழு, செயற்குழு விவரங்கள் முதலியன

தோழர்களே திராவிடன் ஒன்பதாம் ஆண்டுத் துவக்க விருந்தினை சுவைக்க தயாராக இருங்கள்.

அதிக பக்கங்கள் !!!

விலை 6 அணா



மாதிரி சோசியலிசத்தின் மகிமை!

ச. வெ. பாண்டியன்

வருக! வருக!! என அழைக்கிறார் மத்திய மந்திரி டி. டி. கே.! 'வாருங்கள் நன்றாக வியாபாரம் செய்து நலமாக வாழுங்கள்' என இரு கை கூப்பி அழைத்த வண்ணமே இருக்கிறார்!

என் பேச்சிலே சந்தேகம் கொள்ள வேண்டாம்! திடமாக நம்பலாம்—எனது பேச்சை. வந்தவருக்கு வேறு விதமான இன்னல்கள் ஏற்பட விடமாட்டேன். உறுதியான வார்த்தை! ஒளிவு மறைவு இல்லை! எனவே அதைரியப்படாது இந்தியாவுக்கு வாருங்கள்! எங்கும் நிலவி தொழில் செய்யுங்கள்! உங்களுக்கு வேண்டிய அத்தனை சௌகரியங்களுக்கும் நாங்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறோம்! இப்படி உறுதியளித்து வேண்டுகோள் விடுகிறார்!

ஆமாம்! வேண்டுகோள் விடுகிறார் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்—மத்திய சர்க்கார் மந்திரி! யாரை நோக்கி—எதற்காக வருக என வாழ்த்துப்பா பாடுகிறார்...! தினம் தினம் திமிர் பிடித்த கொத்தலாவாலாவினால் பிடரியைப் பிடித்து இலங்கையினின்றும் இந்தியாவிற்குள் யார் தள்ளப்படுகிறார்களோ—கரடுமுரடாக இருந்த காட்டை கழனியாக்கி இலங்கையை எழில்பெறச் செய்தும் இன்று கல்நெஞ்சக் கூட்டத்தினர்களால் கண்ணீர் வடிய யார் விரட்டப்படுகிறார்களோ அந்த நமது சோதரர்களைக் கண்டு வருக வருக! என அழைக்கிறாரா என்று நினைத்துவிடாதீர்கள்! மத்திய மந்திரிக்கு இதுவா மிக முக்கியம்!

அழைப்பு விடுவது கடல்கடந்தோரின் நிலைகண்டு வரவழைத்து ஆதரிக்க அல்ல. அப்படிப்பட்ட நமது ஏழைத் தொழிலாளர்களின் உதிரத்தை உறிஞ்சி உண்டு கொழுத்து வாழும் முதலாளித்துவ கும்பல்களுக்குத்தான் அழைப்பு! ஆயாசப்பட்டு அல்லல்பட்டு வரும் நம் தமிழர்களுக்கல்ல, ஆயாசப்படுவோர்க்கு அரை வயிற்றுக் கஞ்சியைக் கொடுத்து அவனைச் சாக விடாமல் மாடாக உழைக்கச் செய்துவரும் முதலாளித்துவக் கும்பல்களுக்கு! அழைப்பு விடுகிறார் மந்திரியார்!

ஆகாயத்திலே பறந்து திரிந்து எங்காவது தனக்கு இறை கிடைக்கிறதா என்று பார்த்துக் கொண்டலைந்து 'சமயம் கிடைக்கும் போது அப்படியே அபகரித்துச் செல்லும் கருடனைப்போல, உலகமெங்கும் வழிபார்த்துக் கொண்டலையும் அமெரிக்க ஏகாதிபத்திய தாசர்களுக்கு அழைப்பு விடுகிறார்! வல்லூரை வாவா என அழைக்கிறார் அமைச்சர்.

ஓட்டப்பரை அல்ல! உயரப்பர்தான் எனக்குத் தேவை என வரவேற்கிறார்! மண்குடிசைவாசிகளல்ல! மாளிகை வாசிகள்தான் தேவை என்கிறார்! வெள்ளைப் பரங்கியர்தான் எனக்கு வேண்டும். அவர்கள் வருக! என வரவேற்கிறார்!

வரவேற்பதோடு நின்று விடவில்லை அமைச்சர்! வெள்ளையர்கள் வரலாமாம்! இந்தியாவில் எங்கும் தங்கலாமாம்! என்ன தொழிலும் செய்யலாமாம்! எதிலும் முதலீடு செய்யலாமாம்! கொள்ளை லாபத்தை கொண்டு செல்லலாம் அவரவர் நாட்டுக்கு! இத்தனை உதவிகளோடு இன்னும் வேண்டிய வசதிகளெல்லாம் செய்திடச் சித்தமாக இருக்கிறேன் வருக! வருக! என அழைக்கிறார்.

காங்கிரஸ் ஆட்சியில் ஏழைகளைப்பாதுகாக்கவே என்போன்றவர்கள் அமைச்சர்களாக இருக்கிறோம், இன்றேல் எங்களுக்கு அங்கு என்ன வேலை' என்று பேசிடும் காமராசரின் பேச்சிலே கவனம் செலுத்தியோர்; 'பகட்டான ஆடை உடுத்தி மினுக்காக வாழும் பணக்காரர்களைக் கண்டால் எனக்குப் பிடிக்காது. அவர்கள் தங்களை தொழிலாளர்களுக்குத் தியாகம் செய்ய வேண்டும்' என்று அறிவுரை கூறும் நேருவின் பேச்சிலே நிதானத்தை இழந்தோர்; தொழிலாளிக்கு லாபத்தில் பங்கு வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் தேபார் கூறுவதினால் அதை உண்மையென நம்பியோர், தொழிலாளர்களுக்கும் தொழில் துறையில் சமபங்கு அளிக்கும் காலம் அண்டிவிட்டது என்று பேசிடும் குல்சாரிலால் நந்தாவின் பேச்சிக்குச் செவி சாய்த்தோர், ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் கூடாது என்று பேசும் பரமேசுவரரின் பேச்சிலே மனதைப் பதிய வைத்தோர்களெல்லாம் யோசிக்க வேண்டும் இந்த ஆட்சி உண்மையில் யாருக்கு மதிப்பளிக்கிறது—யாருடைய வளத்தை எதிர்பார்த்து அதற்காவன செய்கிறது என்பதை!

ஏழைகளுக்கா! பணக்காரர்களுக்கா! ஏழையைச் சுரண்டிப் பிழைப்போருக்கா! உழைத்தும் ஏதுமின்றி வாடுவோனுக்கா!

பாட்டாளிகளுக்கல்ல பணத் திமிங்கலங்களுக்குத்தான், அதோ அழைப்பு விடுகிறது! ஏழையை மேலும் முதுகெலும்பைப் பயன்படுத்தி தனது சுரண்டல் தொழிலைச் செய்ய அனுமதித்திருக்கிறது இந்திய அரசாங்கம்! காங்கிரஸ் சர்க்கார்.

பாரத வீரர்கள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வகுத்திருக்கிறார்களாம்! அதற்கு 4300 கோடி ரூபாய் சர்க்கார் முதலீடு செய்யுமாம், இது கனரகக் கிராமக் கைத்தொழில்களின் முன்னேற்றத்திற்கு முக்கிய கவனம் செலுத்துமாம், இதில் 2300 கோடி ரூபாய் வரை அயல் நாட்டு உதவி கிடைக்கவேண்டியிருக்குமென ஊர்ஜித மற்ற செய்தி ஒன்று கிடைத்திருக்கிறது. இந்தக் காரணத்திற்காகத்தான் வருக வருக என அழைக்கிறார் மந்திரியார்!

அந்நியர்கள் இங்கு வரலாம், நல்ல முதலீடு செய்யலாம், அதுபோலவே தங்கள் லாபத்தையும் கொண்டு செல்லலாம், வேட்டைக்காக அலைந்து கொண்டிருந்தவனுக்கு எதிரே புள்ளிமான் ஒன்று தோன்றியதுபோல, பசியால் அலையும் வேங்கைக்கு வெள்ளாடு ஒன்று சிக்கியதுபோல அயல் நாட்டு முதலாளித்துவ திமிங்கிலங்களுக்கு இந்தியா நல்ல வேட்டைக் காடாக அமைந்துவிட்டது. ஆம்! அதற்கு வழி அமைத்துவிட்டார் மத்திய மந்திரி!

'நம்முடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு பல துறைகளில் நமக்கு வெளிநாட்டு மூலதனம் தேவையாயிருக்கும்'. கனம் மந்திரி அவர்கள் புதுடில்லியில் 22-ல் கூடிய தொழில் மத்திய ஆலோசனைக் குழுவின் 6-வது கூட்டத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்!

திட்டங்கள் நிறைவேற வேண்டும். உண்மை. அதற்காக எந்த முறையில் செல்ல வேண்டும். ஒரேயடியாக வெளிநாட்டு மூலதனத்தைத்தானா எதிர்பார்க்க வேண்டும்! இதனால் கோடிக்கணக்கான பணம் நாட்டை விட்டே போக வழியல்லவா ஏற்படுகிறது. ஏற்கனவே வெளிநாட்டார்கள் இந்தியாவிலிருந்து இன்று கிட்டத்தட்ட வருடா வருடம் 100 கோடி ரூபாயை ஒதுக்கிக் கொண்டு போகிறார்கள். இந்தக் கொள்ளையில் மேலும் முதலீடு செய்ய ஆரம்பித்தால் நிலைமை என்ன ஆகும்!

அப்படியானால் வேறு வழி என்ன என்று கேட்கலாம்! இந்நாட்டு தொழில் துறைகள் எல்லாவற்றையும் சர்க்காரே எடுத்துக் கொள்ள வேண்டும், அதற்கு கூடுமானவரை நட்டாடு என்ற பேச்சே இருக்கக் கூடாது. இதனால் உற்பத்தியும் பெருகும். தொழில் துறையும் வளர்ச்சியுறும்!

ஆனால் இந்திய அரசாங்கம் இதைச் செய்ய முன்வரவில்லை. மாறாக வேறு பாதையிலே நடை போடுகிறது. தொழில்களையெல்லாம் தேசியமயமாக்கும் எண்ணமே கிடையாதாம். அப்படியே தப்பித்தவறி செய்ய நேர்ந்தாலும் நட்டஈடு அளிக்கிறோம் பயப்பட வேண்டாமென வேறு உறுதி கூறுகிறார் மந்திரியார்.

'உண்மையில் நட்ட ஈடு அளிப்பது தான் அறிவுக்கொத்தது எக்காரணத்தைக் கொண்டும் அது கற்பனை யல்ல.'

'...ஆகவே வெளி நாடுகளிலிருந்து மூலதனமிடுவோருக்கு அந்தத் தொழில்கள் அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்படும்போது நியாயமான நட்டஈடு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்க வேண்டும். சாதாரண அறிவுள்ளவர்களுக்குக் கூட இது புரியும். வெளிநாட்டுத் தொழிலதிபர்களுக்கு மூலதனமிடுமாறு ஆசைகாட்டி பின்னால் அவைகளைப் பறிமுதல் செய்து கொள்ளலாம் என்ற மறைமுகமான ஆசை இந்த அரசாங்கத்துக்குக் கிடையாது.' மேலும் இவ்வாறு விளக்குகிறார் டி. டி. கே.

வெளிநாட்டாரின் சுரண்டலுக்கு எவ்வளவு உறுதிப்பாடு அளித்திருக்கிறார்கள் பாருங்கள்! வெளிநாட்டு உதவி தேவையாம் அதற்காக இத்தனை வசதிகள் அவர்களுக்கு. கொட்டமடிக்கும் டாடாக்களையும், பிர்லாக்களையும் பனியா, மார்வாடிக் கூட்டங்களின் சுரண்டலை ஒழித்துவிட்டு இந்த நாட்டுச் சொத்தையெல்லாம் உழைப்பவனுக்கே சொந்தமாக்கினால் போதும், நாடு நல்ல முறையிலே செழிக்க. போதாக்குறைக்கு வேண்டுமானால் கோயில்களில் முடங்கிக் கிடக்கும் கோடிக்கணக்கான பணத்தைப் பயன்படுத்திக் கொண்டால் போதும்—வாழ்வு வளம்பெற!

இதைவிடுத்து மாற்றானின் மேய்ச்சலுக்கு தட்டின்றி அனுமதித்தல் அவர்களுக்குத்தானே லாபம். யோசித்தார்களா தேசிய வீரர்கள், உள்ளதையும் கொடுத்துவிட்டு ஓட்டாண்டியாக்கவல்லவோ முனைந்துவிட்டார்கள்.

ரஷ்யாவில் எதற்கும் திட்டமிட்டே வேலை செய்வார்கள். அவர்கள் தங்கள் நாட்டை வளப்படுத்த எத்தனையோ ஐந்தாண்டுத் திட்டம் வகுத்து அதன்படி முன்னேறி வருகிறார்கள். ஆனால் அவர்கள் வகுத்த எந்தத் திட்டத்திலுமே அந்நிய முதலீட்டிற்கு வழி காண்பித்ததே கிடையாது. சமீபத்தில் விடுதலை பெற்ற சீனாவில் கூட அயல் நாட்டு முதலீட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்ததில்லை. ஆனால் இந்தியாவில் தான்—பாரதரத்ன பண்டிதரின் ஆட்சியில்தான் இத்தனை வசதிகள்—வாய்ப்புகள் அயல்நாட்டு மூலதனத்திற்கு.

இந்த நிலையிலே ஆவடித் தீர்மானமான 'மாதிரி சோஷலிசத்தை' வேறெங்குச் சென்றாலும் உச்சரிக்கத் தவறுவதில்லை. சாதாரண தொண்டனிலிருந்து பாரதரத்னம் பெற்ற தலைவர் வரை மாதிரி சோஷலிசத்தின் அருமை பெருமைகளை அள்ளி வீசுகின்றனர். 'சோஷலிசத்தைத் தழுவிய சமுதாயத்தை அமைப்பதே நமது குறிக்கோள்! இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இந்த அடிப்படையில்தான் பரிசீலிக்கப்படுகிறது' என்று தலைவர் தேபார் விளக்குகிறார்!

சோஷலிசம் என்றாலே ஏற்றத்தாழ்வு அற்ற சமுதாயம், அங்கே உயர்ந்தோர் இல்லை; தாழ்ந்தோர் இல்லை! ஏழை இல்லை; பணக்காரன் இல்லை. எல்லோரும் சரிநிகர் சமானம் என்பது பொதுவான கருத்து. ஆனால் தேசியத் தலைவர்களின் கண்டுபிடிப்பு அப்படியா இருக்கிறது.

சோஷலிச அடிப்படையில் அலசுகிறோம்—ஆராய்கிறோம் என்று கூறிக் கொண்டே முதலாளித்துவத்திற்கு வரவேற்பு அளிக்கிறார்கள்! தேசியமயமாக்குவதில்லை என்ற உறுதியை அளிக்கிறார்கள், உங்கள் முதலைப் பறிமுதல் செய்ய மாட்டோம், அந்த ஆசை கிடையாது என்று தெளிவாகவே கூறி அவர்களுக்கு 'அபயம்' அளிக்கின்றனர் அஹிம்சா மூர்த்திகள்.

சுதந்திரம் வாங்குவதற்குமுன் 'ஐயோ! நமது பொருளையெல்லாம் சுருட்டிக் கொண்டு போகிறான் வெள்ளையன்! கோடி கோடியாகக் கொண்டு செல்கிறான் லண்டனுக்கு. நமது பணத்தைச் சுரண்டி அவன் சுகபோகத்தில் புரள்கிறான். விடாதேயுங்கள்! ஒழியுங்கள் வெள்ளை ஏகாதிபத்தியத்தின். சுரண்டலை அனுமதியாதீர்கள்' என்றுமேடையதிரக் கர்ஜித்தார்கள். வெள்ளையன் முதல்போட்டு அள்ளிக்கொண்டுபோனதைச் சுட்டிக் காட்டி 'சுதந்திரச் சங்கு' ஊதினார்கள். சுதந்திரம் கிடைத்தால்—கிடைத்ததும் அவனது சுரண்டல்ஒழிக்கப்படும் என்றனர்! ஒழிக்கப்பட்டிருக்கிறதா இன்று! இல்லையே! மாறாக வாவா என்ற வரவேற்பு, வசதிகள் செய்கிறேன் என்ற வாய்மொழி வேறு.

அதுவும் ஏன் இப்படி உறுதியளிக்கும் படலம் ஆரம்பமானது என்று ஆராய்ந்தால் இவர்களின் யோக்கியதை தெரிய ஏதுவாகும்.

ஆவடியின் மாடல் சோசலிசத்தின் பொய்க்கால் குதிரையை கண்டு வெளிநாட்டார் பயந்தனர்—முதலீடு செய்வதற்கு! எனவே டி. டி. கே.யிடம் அதற்கான உறுதிமொழி ஒன்றை இந்திய அரசாங்கம் தருமா என்று வெள்ளைக் கம்பெனிகள் கேட்டன. அதற்கென தனி இலாகாவையும் ஏற்படுத்தி, அது பற்றி ஆராய்ந்து இப்போது முதலுக்கும் அழிவில்லை-லாபத்திற்கும் குறைவு இல்லை என அறிக்கை வெளியிடுகிறார் மந்திரியார்.

தேசிய மயமாக்குதல்......பேசிடக் கூடாது! அப்படியே ஆனாலும் நட்டஈடு கிடைக்கும். முதலுக்கு—லாபத்திற்கு குறைவில்லை. அனுமதி கிடைத்துவிட்டது இந்திய அரசாங்கத்தினிடமிருந்து. இனி அந்நியர் கூடார மடிப்பர்—சுரண்டுவர்! கொண்டு செல்வர். இப்படித்தான் ஆகப்போகிறது நாடு.

அந்நிய முதலாளித்துவ கோஷ்டிக்கு நல்ல அறுவடை கிடைக்கப் போவது உறுதி!

பாடுபடுவோன் என்றும் போலவே, விவசாயி என்றும்போல் வேதனைப்பட வேண்டியதுதான்! ஆனால் வெள்ளையர்களோ—குபேரபுரிக் கோமானவர்!

ஏழைக்கு வாழ்வளிக்கிறோம் என்ற பேச்சு ஒருபுறம்! மறுபுறத்திலே 'கோமான்'களிடம் சரசம் பேசி அவர்களின் ஆக்கத்திற்கு ஊக்கமளித்தல்! இதுதான் தேசிய ஆட்சியின் கோலம்!

சோசலிசத்தை அல்ல—மாதிரி சோசலிசத்தை இதற்காகத்தான் உண்டாக்கிக் காட்டினார்கள் போலும்! சயாம் உலகம் அறிந்தவர் அல்லவா நேரு! அவரின் மாதிரி சோசலிசத்திற்கு மகிமை இருக்காமல் போகுமா என்ன!

கைத்தறி ஆடையையே அணியுங்கள்

ஆனந்த சுதந்திரமாம்!

நமது நாடு "ஆனந்த சுதந்திரம்" அடைந்து விட்டதாக ஆடிப்பாடுகின்றனர் நமதருமைத் தேசியத் தோழர்களும் பிறரும். ஆனால் நாம் கூறுகின்றோம், நாம் உண்மை உரிமை பெறவில்லை; வெள்ளையர் கையிலிருந்த நமது பிடிப்பு அத்தனையும் இன்று வடவர் கைக்கு மாறிவிட்டதே தவிர நாமும் நமது அமைச்சர்களும் மற்றோரும் அவர்கள், 'ஆட்டுவித்தால் ஆடுகின்ற' பம்பரங்களாகவே இருக்கின்றனர், என்று:

நமது கலை, மொழி பண்பாடு, நாகரீகம் அத்தனையும் இன்று வட நாட்டவரின் கையை எதிர் பார்த்துத்தான் வாழவோ அல்லது வளரவோ வேண்டிய நிலைக்கு ஆட்பட்டுள்ளன, ஆகவே நாம் 'ஆடுகின்ற' சுதந்திரமல்லாது ஆண்மையுள்ள, உரிமையுள்ள, சுதந்திரம் பெற வடவரின் ஆதிக்கப் பிடியிலிருந்து—டில்லி தர்பாரிலிருந்து! விடுபட வேண்டும்; திராவிடக் கூட்டாட்சியில் சுதந்திரத் தமிழகமாக நமது நாடு விளங்க வேண்டும் என்று நாம் திராவிட முன்னேற்றக் கழகம் கூறுகின்றபோது நம்மைத் தூற்றவும் திட்டவும் புறக்கணிக்கவும் தயங்கியது கிடையாது, நமக்கு 'மாற்றார்கள்' என்ற பட்டத்தைத் தாங்களாவே சூட்டிக் கொண்டவர்கள்.

ஆனால் நாம் எதிர்ப்பை ஏற்றுக் கொண்டு, வசையை வாழ்த்தாகக் கருதி, தூற்றலையும் திட்டலையும் தூய மலர் மாலைகளாகவும் ஆபரணங்களாகவும் அணிந்து கொண்டு நமது லட்சிய முழக்கத்தை மக்கள் மன்றத்திலே முழுங்கி வருகின்றோம். அம் முழக்கம் மாற்றோர்களது முகாமிலுள்ள நல்லவர்களது மனத்தைத் தொட்டு அவ்வப்போது பேசச்செய்து வருகிறது.

வட நாட்டு ஆதிக்க கோரப் பிடியிலிருந்து விடுதலை பெற வேண்டும், நமது தமிழகம் உள்ளிட்ட திராவிடம் என்று அவ்வப்போது நாம் எழுப்பிவந்த குரலைக் கேட்டு 'கிண்டலும் கேலியும்' கண்டனமும் கூறியவர்களது பட்டியலிலே நமது சைவச் சிலர்களும் ஒரு சாரார்! கைலையங்கிரி என்ற இமயமலையிலே வீற்றிருக்கின்றார் எம்பெருமான் சிவன் எம்பிராட்டி பார்வதி அம்மையாருடன், தென்னாட்டை வாழ்விக்க, தமிழை வளர்க்க அகத்திய முனிவரை பொதிய மலைக்கு அனுப்பி அருள் பாலித்துள்ளார். ஆகவே வடநாடு தென்னாடு என்று வம்பு பேசுவது கூடாது. என்று கூறி ஆண்டவனை ஆதாரங்காட்டி நம்மைச் சாடி வாந்தனர். ஆனாலும் தென்னாடுடைய சிவனே போற்றி! என்று கூறுவதிலுள்ள தென்னாட்டின் சிறப்பையும் வட நாட்டுச் சார்பில்லாத் தன்மையையும் சிந்திக்க மறந்து விட்டனர்.

அவர்களில் ஒருவரான 'செல்லூர்க் கிழார்' திரு. செ. ரெ. இராமசாமி, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக திங்கள் வெளியீட்டில் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் தனது உள்ளத்தின் உண்மைக் குமுறலை வெளியிட்டுள்ளார்.

'துஞ்சாக் கண்ண வடபுலத்தரசே!' என்றிருந்த நிலை இன்று மாறி வடவரின் கீழ் அடிமையாக வாழ்வதில் என்ன நலனிருக்கிறதென்பதை அமைச்சர்கள் எண்ணிப் பார்த்தல் சாலும்!'

இன்றை அரசியல் உலகில் மிகமிக ஆபத்தான 'காலனி' முறையில் இருக்கின்ற நம்நாட்டின்—திராவிடத்தின் நிலையை உணராது அலட்சியப் பேச்சு பேசிவருகின்ற அமைச்சர்கள் டி. டி. கிருஷ்ணமாச்சாரி, சி. சுப்பிரமணியம் போன்றவர்களைப் பார்த்து மேலும் அவர் கூறுவதைக் கேளுங்கள்:

குலசேகரன்

'தனி நாடாகப் பிரிந்தாலன்றி தமிழ் மொழிக்கோ, கலைக்கோ, நாகரீகத்துக்கோ, பண்புக்கோ வளர்ச்சியில்லை' என்று பிரிவினை முரசு கொட்டுகின்றார்.

நாம், தென்னாட்டை வஞ்சித்துத் தீட்டியுள்ள ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டித்து நாடெங்கும் கண்டனக் கூட்டங்கள் நடத்தியபோது காரசாரமாகத் திட்டியவர்கள் ஏளனமாக 'எட்டிக்காய்' மொழி பகர்ந்தவர்கள், இந்த சைவப் புலவர் எழுதியுள்ளதைச் சிந்தித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

'ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ் நாட்டிற்கு என்ன நலனிருக்கிறது? வடநாட்டில் பல கோடிக்கணக்கில் பணத்தை வாரி இறைத்து ஆற்றின் அணைக்கட்டுகள் கட்டி நீரைத் தளைத்து, விளைவைப் பெருக்குகின்றனர். இங்கே காவிரிக்கு என்ன திட்டமிட்டுள்ளனர்? வையைக்கு என்ன வாய்ப்பு; பொருநைக்கு என்ன பொருத்தம்; ஒன்றுமில்லை. மழையும் பெய்யாது, அதை அணை கோலித் தடுக்கவும் திட்டமில்லை, எல்லாம் வடக்கே.

மொழி உணர்ச்சியுடன் மேலும் எழுதுகிறார் பாருங்கள்! உலக வழக்கில் செத்துப்போய் ஏட்டளவில் நிற்கும் வடமொழியை ஒரு தனிக்கூட்டம் ஆட்சி மொழியாக்க மடிதற்று நிற்கிறது. அதைக் கண்டும் கேட்டும் மானங்கெட்ட தமிழா, தமிழ் ஆட்சி மொழியாகக் கூடாதெனத் தடங்கல் செய்யும் ஒரு சாராருக்கு துணை நிற்கின்றனர். முன்பு மேலைநாட்டானுக்கு தமிழகம் அடிமையாயிருந்தது; இன்று வடநாட்டானுக்கு மீளா அடிமையாகக் கிடக்கின்றது.' மொழியுணர்வற்றவர்களை மானங் கெட்டவர்கள் என்று எழுதுகின்ற அளவுள்ள அவரது தமிழ்ப் பற்றை எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்.

அவரது முரசு மேலும் கொட்டுகிறது ஆரஅமரக் கேளுங்கள். 'வடநாட்டு அகதிகளெனப்படுவோர்க்கு மாட மாளிகைகளில் குடியிருந்து இன்பமாக வாழ இடமுண்டு. தமிழ் நாட்டு அகதிகட்கு இருக்க, நிற்கக் கூட இடமில்லை. தெருக்களில் அங்கண நீர் (சாக்கடை) செல்லுமிடங்களில் பிள்ளை குட்டிகளுடன் வெயிலில் காய்ந்தும் பனியில் நடுங்கியும், மழையில் நனைந்தும் காலந் தள்ளுகின்றனர். வாயில்லாப் பூச்சிகளாகிய இவர்கள் தமிழ் நாட்டில் பிறந்த குற்றத்துக்காக இந்த நிலை? வடவராகப் பிறந்த சிறப்பினால் நாடுவிட்டு நாடான மொழி பெயர் தேயத்திலும் செல்வாக்கு; சிறப்பு. இதைக் கேட்டால் குறுகிய மனப்பான்மையுடையவன்; நாட்டைத், துண்டாடுகிறவன் என்று தூற்றப்படுகின்றது: கேட்டால் குற்றம்; கேட்காதிருக்க நடுநிலை நெஞ்சம் ஒருப்படுகின்றிலது.' திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர் பேச்சுப்போல் உள்ளதல்லவா? அப்படியொன்றுமில்லை! மேலே குறிப்பிட்டுள்ள சைவப் பெரியாரது எழுத்துத்தான்!

இலங்கையிலிருந்தும் பிற இடங்களிலிருந்தும் விரட்டப்படும் நமது திராவிட அகதிகள் பிச்சை எடுக்க, திண்டாட தற்கொலை செய்து சாக வேண்டிய நிலையிலும் அரசாங்கம் பாராமுகமாக அலட்சியப் படுத்துகின்றபோது வடநாட்டு அகதிகளுக்கு மாத்திரம் கோடானு கோடி ரூபாய்களைக் கொட்டியளக்கின்ற ஓரவஞ்சகத்தை கொடுமைப் போக்கை ஆணித்தரமாகக் கண்டிக்கின்ற அவரது எழுத்தில் நமது இலட்சியக் குரலின் நேரடியான எதிரொலி கேட்கிறதல்லவா?

நமது கொள்கை, மாற்றார் முகாமலிருந்து, காங்கிரஸ், கம்யூனிஸ்டுக் 'காம்ரேடுகளின்' உள்ளத்திலிருந்தும் கூட ஒலிக்கத் தொடங்கிவிட்டது. ஒதுங்கிக் கிடந்த சைவமும் பேச ஆரம்பித்துவிட்டது. இந்த நல்ல சூழ்நிலையில் நமது மாநில மாநாடும் கூடவுள்ளது. திராவிடத்தின் விடுதலைப் போராட்டத்திற்கான உருப்படியான திட்டம் தீட்டி, மாநில மாநாட்டின்போது, மக்கள் மன்றத்திற்குத் தரவேண்டிய பொறுப்பு நமது பொதுச் செயலாளரதும் மற்றும் முன்னணித் தலைவர்களதுமாகும்.

வெற்றி நமதே.

விந்தைதான் யாதோ!

விரிவானத் திரைநடுவே வரைந்த யெழில்
ஓவியமாய், வண்ணஒளிப் பிழம்பாய்
இருளகற்றும் மணிவிளக்காய், கனியிதழ்க்
கடைவிரித்தே கள்ளக்—குறுநகை
புரிந்துவரும் நிலவென்னும் சுந்தரியைப் போல
கனிமரங்கள் சூழ்ந்த யெழிற் காவினிடையே
உரு(ம்) மரத்தி ஞோர்கொம்பில் ஒய்யாரமாக
ஒளிர்கன்னம் சிவக்க உறையுமாங் கனியே!

சுரக்கின்ற காதற் சுடுநெருப்பின்
சுவாலையினால் சுருண்டுவிடும் காதலர்க்கும்,
பிறக்கின்ற கற்பனைப் பெருவெள்ளந் தன்னைப்
பரந்தமன அணைதனிலே பாங்குடனே தேக்கிச்
சிறக்கின்ற கவிகள்பல சமைத்தளிக்கும்
சீரியோர்க்கு முவமையாய் இந்நாள் மட்டும்
இருந்திட்ட நீயின்று, புகழ்நாடும் பாரதப் பிரதமரின்
தனிச்சொத்தாய் மாறிவிட்ட விந்தைதான் யாதோ!

கோவை, சந்தானம்

பஜனைக் கோயில் தெரு

கற்பனைச் சித்திரம் —— அண்ணா அன்பன்

நல்ல தெருதான் அது. முனிசிபாலிடிகாரர்கள் எல்லா தெருக்களையும் அமைத்திருக்கும் முறையில்தான் அந்தத் தெருவையும் அமைத்திருந்தார்கள். நல்ல விளக்குகள் உண்டு, நல்ல தண்ணீர்க் குழாய்கள் உண்டு, நல்ல குப்பைத் தொட்டிகளும் உண்டு...ஆனால் ஏனோ அந்தத் தெருவுக்கு இரவு நேரத்தில்தான் உயிர் பிறக்கும், இரவிலேயே உயிர் வாழும்—பகல் தோன்றியவுடனே செத்துவிடும்! பகல் நேரங்களில் அந்தத் தெருவிலுள்ள வீடுகளெல்லாம் மூடிக் கிடக்கும்—நாமம் தெரியும், பட்டை தெரியும்—மூடப்பட்ட அந்த வீட்டுக் கதவுகளிலெல்லாம்!

இரவு நேரங்களில் டாக்ஸிகள் விரைந்து வந்து நிற்கும்; அவைகளிலிருந்து பணம் நிறைந்த பெரிய மனிதர்கள் துன்பச் சுமை குறைந்த உள்ளத்தோடு இறங்குவர்—இறங்கும் சிலர் தலையிலே முக்காடு இருக்கும், சிலர் உதட்டிலே சிகரெட் இருக்கும்—இருதரப்பினரும் சுற்றி முற்றிலும் ஒரு தடவை அந்தத் தெருவைப் பார்த்துவிட்டுத்தான் கதவைத் தட்டுவர்; வளையல் ஒலி முதலில்—கதவு திறக்கப்பட்டவுடனே சிரிப்பொலி பிறகு! அந்தச்சிரிப்பொலியையே தன் ஜீவ ஒலியாக ஏற்றி மகிழ்ந்து கதவைத்தட்டிய அக்''கன்னியர்கள்'' உள்ளே நுழைவர்—நுழைந்தவுடன் ஒரே இன்ப ஒளி வெள்ள மயம்.

அன்றிரவும் வழக்கம் போலவே அந்தத் தெரு உயிர் வாழ்ந்து கொண்டிருந்தது. கன்னியர்கள் வந்தார்கள்—கதவுகள் தட்டப்பட்டன! வளையல் ஒலிகள் நெருங்கின—சிரிப்பொலிகள் சிதறிக் கொண்டிருந்தன...

சேகரனும் வந்தான்; அவன் புது வாடிக்கைக்காரன் போலும், தயங்கியவாறு கதவைத் தட்டினான். உள்ளே நுழைந்தான்! கதவு மீண்டும் மூடப்பட்டது! சிறிது நேரம் கழித்து திடீரென்று குழந்தையை விற்ற தாயைப் போல் காணப்பட்ட அந்த வீட்டிலிருந்து ஓர் அலறல்...பஜனைக் கோயில் தெரு வாசிகள் யாவருமே நடுங்கிவிட்டனர்! என்றுமே அப்படிப்பட்ட அலறல் அந்தத் தெருவில் கிளம்பியதில்லை! ஏதோ சில முனகல்கள், வேதனைப் பெருமூச்சுகள் கிளம்புமே தவிர அலறல் எழும்பி அந்தத்தெருவை அதிரடித்ததில்லை!

சிறிது நேரத்திற்கெல்லாம் அந்தத் தெருவில் ஒரே அமளி! ஒரே குழப்பம்! போலீஸ் வண்டிகள் அந்தத் தெருவில் காணப்பட்டன! அவைகளிலிருந்து போலீஸ்காரர்கள் வெளியே குவியத் தொடங்கி வீடுகளில் பாய்ந்து கொண்டிருந்தனர், உடனே ஒவ்வொரு வீட்டிலிருந்தும் அலறல்கள் பல கிளம்பின—விதவிதமாக, பலரகமாக தெருவிலேயும் சிலர் ஓடிக் கொண்டிருந்தனர். டாக்ஸியிலிருந்து இறங்கியக் கன்னியர்கள்—அந்தக் கன்னியர்களை அங்கே அழைத்து வந்த புண்ணியர்கள்—அவர்களுக்கிடையில் மானத்தை உலர வைத்துவிட்டு வயிற்றை மட்டும் குளிர வைத்துக் கொண்டிருந்த பொன்னவிர் மேனியர்கள் — எல்லோருமே ஓடிக் கொண்டிருந்தனர் கண்மூன் தெரியாமல்! பாவம்! பஜனைக் கோயில் தெரு போலீஸின் படைக் களமாகி விட்டது!

இத்தனை அமளிகளுக்கும் காரணமாக இருந்தது அந்தத் தெருக் கோடியிலே சோகமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்த அந்த வீடுதான். அந்த வீட்டிலிருந்துதான் முதன் முதலில் அடிவயிற்றை கலக்க வைத்த அலறல் எழுந்தது. அந்த அலறலையொட்டிதான் போலீஸ் படையெடுப்பும் அந்தத் தெருவில் பாய்ந்தது.

அந்த அலறலை எழுப்பியவள் வசந்தா. வசந்த காலத்துப் பருவத் தென்றலாகத்தான் இருந்தாள் ஒரு காலத்தில்! இன்றோ மழை அடித்த பிறகு மண்ணில் புதைந்து கிடக்கும் மலரைப் போல் போலீஸ்காரர்களின் நடுவிலே உடல் நடுங்க நின்றுகொண்டிருந்தாள் அவள் தளிர் உடலில் ரத்தம் ஒட்டிக் கொண்டிருந்தது. அவள் குளிர்முகம் அதனால் வெளிறிப்போய் கிடந்தது. அவள் கரியக் கண்கள் நீர்க்குளங்களாகியிருந்தன!

கூடத்தில் ஓர் நாற்பது வயது மதிக்கத்தக்க ஒருவன் குத்தப்பட்டு இரத்த வெள்ளத்தில் மூழ்கியிருந்தான், அவனை சற்று தள்ளினாற்போலுள்ள ஓர் அறையில் சேகரன் நெஞ்சிலே சொருகப்பட்ட ஒரு கத்தியோடு மரண மூச்சு விட்டுக் கொண்டிருந்தான். அவனிடம் அன்பும் பணிவும் நிறைந்திருப்பதுபோல் போலீசுக்கே உரித்தான பாணியில் அவனைத் துடிக்கும் நெஞ்சத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார் இன்ஸ்பெக்டர் ஆபத்சகாயம்! சேகர்...இந்த இரண்டு கொலைகளையும் வசந்தாதான் செய்தாளா!—கேட்டார் ஆபத்சகாயம்.

மரணமூச்சு விட்டுக் கொண்டிருந்த சேகரன் ஓர் வரட்டுச் சிரிப்பு சிரித்தான். எரிச்சலாகத்தான் இருந்தது ஆபத்சகாயத்துக்கு! வேறு சமயமாக இருந்தால் அவனை மிரட்டிக்கேட்கலாம். ஆனால் அவன் மரணவாசலில் நின்று கொண்டிருந்தான்...துடித்தார் ஆபத்சகாயம்!

சார்!...வசந்தா கொலைகாரியல்ல... என்றான் சேகரன்.

அப்போது......இந்த சம்பவங்களுக்கெல்லாம் யார் காரணம்!

சேகரன் மெல்ல மெல்ல திணறியவாறு தன் மரண வாக்குமூலத்தைக் கொடுத்தான், சிறிது தூரத்தில் நின்று கொண்டிருந்த வசந்தாவை அருகே அழைத்தான். சற்று நேரம்வரை அவள் முகத்தையே உற்றுப் பார்த்துவிட்டு கண்களை மூடினான். மூடிய கண்கள் மீண்டும் திறக்கவேயில்லை. வசந்தா கதறிக் கதறி அழுதாள்! விபசாரிதான் அந்த புது வாடிக்கைக்காரனுக்காக அழுதாள்! ஆபத்சகாயத்துக்கு அவள் அழுகை ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லை. அவருக்கு அவள் மீது ஓர் பரிதாபகரமான உணர்ச்சிதான் பெருக்கெடுத்தது. அந்த வாக்குமூலத்தை சரியாகக் கோர்வையாக்கி அதன்மீது பார்வையை செலுத்தினார் ஆபத்சகாயம்...

''சூழ்நிலைதான் மனிதனின் குணத்தை உருவாக்குகிறது என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால் அந்த சூழ்நிலைக்கு மனிதன் எப்படி தள்ளப்படுகிறான் என்பது யாவருக்கும் புரியாத விஷயம்! சூழ்நிலை மனிதனைத் தேடி வருகிறதா, அல்லது மனிதன் சூழ்நிலையை நாடிப் போகிறானா என்று பார்த்தால்—

மனிதன்தான் சூழ்நிலையை நாடிப் போகிறான்—போகிறவன் கெட்டழிந்தால் விதியென்றுசொல்லித் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறான். நல்லது பெற்றால் அதிருஷ்டம் என்று கூறிக் கும்மாளமடிக்கிறான்! நானும் சூழ்நிலைநோக்கித்தான் நடந்தேன் — நடப்பதற்கு என்னைத் தூண்டிவிட்ட அந்த பெண் லலிதா!

'அவளும் நானும் காதலித்தோம். இல்லை! நான் அவளைக் காதலித்தேன் மனமாற. ஆனால் என்னைக் காதலிப்பதாக அவள் நடித்தாள் மனம் வேறொருவனை நாட! அவள் பணக்காரி! அவள் உடற்பசியைத் தீர்க்கும் ஏழையாகிவிட்டேன் நான். என் உள்ளத்தில் அவள் விதைத்துவிட்ட காதல்விதை ஏக்கமெனும் விஷ விருட்சமாக உருவெடுத்தது. அந்த ஏக்கத்தை மறைக்க மதுவைத் தேடி அலைந்தேன். பிறகு பெண்களை நாடிச் சென்றேன்! ஏனென்றால் சலனமற்றிருந்த என் இதயப் பொய்கையில் காதலென்னும் கல்லை வீசியெறிந்து விட்டாள் அந்த வஞ்சகி! எனவே எல்லோரும் எனக்கு லலிதாவாக காட்சியளித்தார்கள்.

'நான் சிறிய வயதிலேயே தாய் தந்தையை இழந்துவிட்டவன்; எனக்கு நான்கு வயதிலே ஓர் தங்கை யிருந்தாள் அப்போது! அவள் மூன்னூறு மைல்களுக்கு அப்பாலிருந்த என் சிற்றன்னை வீட்டில் பிழைத்து வந்தாள்! அவளை நான் பார்த்ததேயில்லை; பார்ப்பதற்கு சகோதர பாசம் தூண்டும்; ஆனால் நான் போனதில்லை. காரணம் ஒரு சமயம் நான் போயிருந்தபோது என் சிற்றன்னை என்னை அடித்து துரத்தி விட்டாள்! நான் பெரியவனான பிறகு—நான்வாழ்வதற்கு ஓர் நிலையை அடைந்த பிறகு—என் தங்கையை அழைத்துவரச் சென்றேன்; ஆனால் அவள் இல்லை! எங்கேயோ ஓடிவிட்டாள் என்று தெரிந்தது! நான் மனமுடைந்து திரும்பினேன்...

ஆனால் அந்தத் தங்கையை இந்த வீட்டிலே கண்டேன்; என் தங்கையிடமே சோரம் போக முயன்ற பாவி நான்! முதலில் அவள்—என் வசந்தா—என் தங்கையென்று தெரியாது! எப்படித் தெரியும்! நான்கு வயதிலே அவளைப் பார்த்தது; அவளே தன் கதையைச் சொன்னாள்; சிற்றன்னையால் கொடுமைக்கு ஆளான அவள், ஓர் துரோகியின் வார்த்தையை நம்பி இங்கே வந்துவிட்டாளாம்! அவள் வாழ்க்கையை வளமாக்குவதாகச் சொல்லி, அவளை இங்கே அழைத்து வந்து அவளை விபசாரியாக்கி அதன்மூலம் தன் வயிற்றைக் கழுவிக் கொண்டிருந்தான் ஓர் கயவன். அவன்தான் என்னால் குத்தப்பட்டு கூடத்திலே சவமாகிக் கிடப்பவன்! கத்தி அவனுடையதுதான்! என் தங்கையின் சோகக் கதையைக் கேட்டு குமுறி யெழுந்த என்னைக் குத்திச் சாய்க்க முயன்ற அவனை நான் கொன்றுவிட்டேன்! தங்கையிடமே சோரம் போவதற்கு ஓர் சந்தர்ப்பம் அமைந்தது இந்த அண்ணனுக்கு! நினைத்துப் பார்த்த எனக்கு வாழ்வே வேம்பாகிவிட்டது. நானும் அதே கத்தியால் குத்திக் கொண்டேன், வசந்தா பொறுப்பாளியல்ல குற்றவாளியுமல்ல அவளைவிபசாரி என்று குற்றம் சாட்டி தண்டனை அளிப்பதைவிட விபசாரம் பெருகுவதற்குக் காரணமாக இருப்பவர்கள், அவர்கள் எந்த உருவத்தில் இருந்தாலும்சரி அவர்களைத் தேடிப்பிடித்து செம்புள்ளி கரும்புள்ளியிட்டு கழுதையின் மீது ஊர்வலம் நடத்த வேண்டும்...!

வாக்குமூலம் முடிந்து விட்டது; ஆபத்சகாயம் வசந்தாவைப் பார்த்தார்; அவள் அழுது கொண்டுதானிருந்தாள்; அந்த வீட்டைவிட்டு வெளியே வந்து பார்த்தார்; அந்த பஜனைக் கோயில் தெருவே அழுது கொண்டிருந்தது!

சுமைதாங்கி தொடர்ச்சி

குள்ளேயே ஒரு பெரிய மனப்போர் நடந்து முடிந்தது. நீண்ட பெரிய நாவலிலே அவ்வப்போதைய அரசியல் நிகழ்ச்சிகளையும் ஒட்டிக் காட்டிக் கொண்டே போகும் முறையை இலக்கிய ரசிகர்கள் வரவேற்பார்களா? நாவலின் வேகச்சுவை தடைபடுமா?... என்றெல்லாம் கேள்விகளைப் போட்டு விடையைத் தெளிவாக்கிக் கொண்ட பின்னர்தான்...... சுமைதாங்கியின் முதல் வரியையே எழுதத் துவங்கினேன். ஒரு குறிப்பிட்ட கட்சிக் கொள்கைகளை நாவலோடு கோர்க்கும் போது...கட்சி அங்கத்தினர்களுக்கும், அனுதாபிகளுக்குந் தான் கதை திருப்தி யளிப்பதாக ஆகும் என்ற நிலையை...சுமைதாங்கிக்கு வந்து குவிந்த மாற்று முகாமின் மகிழ்ச்சித் தூதுகள் மாற்றிவைத்திருக்கின்றன.

ஒரு புலவர்—கதர் தாங்கிய மேனியர்...சுமைதாங்கியின் நடையை நான் வெட்கும் அளவுக்குப் பாராட்டி 'எங்களைத் தாக்கினாலும்—எங்களின் ஐக்கிய இந்தியக் கோட்பாடுகளை மட்டந்தட்டினாலும்...சுவையான கதை கூறும் சுமைதாங்கியைப் படிக்கவும், அதுதரும் அரசியலுக்காக விளக்கந் தேடிக் கொள்வதற்காகவும் 'திராவிடன்' தேவைப்பட்டது, எனவே தவறாமல் கிடைக்க ஓராண்டு சந்தாவும் கட்டிவிட்டேன்!' என்று பூரித்துக் கூறியிருந்தார், திராவிடனுக்கு ஒரு புதிய ரசிகர் ஏற்பட்டு விட்டாரென்ற மகிழ்ச்சியை மட்டும் அது காட்டவில்லை! என்னதான் அரணை அமைத்துக் கொண்டாலும் 'அவர்களின்' வட்டாரத்துக்குள்ளே எவ்வளவு லாவகமாக நுழைந்து நம்மவரின் கொள்கை—கோட்பாடுகளுக்கு ஆதரவு தேடுகிறோமென்ற 'படையெடுப்பை'யும் விளக்கிதான்வைக்கிறது.

கனி மொழி பேசிய அந்தக் கதர் மேனியரின் கூடாரத்திலே புதிதாக அடிவைத்திருக்கும் சில 'போர்வை'க்காரர்கள் ......சுமைதாங்கி காட்டிய காலக் கண்ணாடியைக் கண்டு சுடுசொல்லும் வீசாமற் போகவில்லை. அவர்களுக்கு என் அனுதாபம். மரக்கட்டையிலே...தீபட்டால் எரியத்தானே செய்யும்; அந்த எரிச்சலை தேசீயத் தண்ணீர் விட்டு அணைத்துக் கொள்ளட்டும். அந்தக் காரணத்துக்காகத்தான் 'சுமைதாங்கியில் வரும் பெயர்களும் யாரையும் எந்த இடத்தையும் குறிப்பிடுவன அல்ல என்று நாம் முதலிலேயே 'முகவுரை' தொங்க விட்டுக் கொள்ளவில்லை. கதை காலத்தை அடிப்படையாகக் கொண்டது. சம்பவங்களும், சூழ்நிலையும் யாரையும் — எந்த நேரத்திலும் குறிப்பிடத்தக்கதேதான். சமுதாயத்திலே...தேவதாஸ், அமுதா, நர்மதா, சேகர், சுந்தரி, குமரன், பக்கிரி; ஜன்னல் காதலன், சிலோன் சுந்தரம், மாசிலாமணி, குணவதி...ஆகியோர் மிக ஏராளம். எனவேதான் இவர்கள் கற்பனை உருவங்களல்ல...வாழ்க்கையிலே—நாம் நாளும் நாளும் சந்திக்கும் மனித உருவங்கள்தான். கதையிலே நடமாடும் அத்தனை பாத்திரங்களும் ஒரு சோகச்சுமையினராகத்தான் ஆக்கப்பட்டிருக்கின்றனர். ஒருவருக்காவது சுவையில்லை. 'மங்களம்' கூறாத முறையிலே கதை முடிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட முடிவிலேதான்......ரசிகர்களின் எண்ணத்துக்கும் கதைக் கருத்துக்குமிருக்கக் கூடிய 'சொந்தம்' அறுந்துவிடாமலிருக்க முடியுமென்று நான் நம்புகிறேன்.

பாராட்டுக் கூறியவர்களுக்கு என்நன்றி—சுடுசொல் வீசியவர்களுக்கும் சேர்த்துத்தான்...அந்தச் சுடுசொல்லும் தாராட்டுப் பாடும் பாராட்டுதானே நமக்கும்!

—கதாசிரியர்

ரஷ்யாவில் சிறுகதை தொடர்ச்சி

3

ஜுவானேவின் அளவிற்கு புகழ் படைத்தவனல்ல என்றாலும் அவரைப் போலவே கற்பனைத் திறனும் எழுதும் திறனும் படைத்தவர்தான் லெயோனேவ். ஆனால் லெயோனேவின் பாத்திரங்களுக்கு மனஉறுதியும் தெளிவும் குறைந்து காணப்படுகிறது. இந்த ரகத்தைச் சார்ந்த பாத்திரங்கள் ரஷ்ய நாட்டு மக்களுக்கு பிடிக்காததால்தான் அவருடைய கதைகள் எளிதில் புகழுடைய இடலவில்லை. கதாபாத்திரத்தை உண்டாக்குவதிலும் சூழ்நிலை விளக்குவதிலும் லெயோனேவ் ரஷ்ய எழுத்தாளர்களில் முன்னணியில் நிற்பவர் என்பதை இன்றைய ரஷ்யாவின் விமர்சகர்கள் ஒப்புக்கொண்ட விஷயம். லெயோனேவின் சிறந்த கதைகளில் ஒன்று 'ஜுவானேவின் துரதிர்ஷ்டம்' என்பது. கதைச் சுருக்கத்தைச் சுவையுங்கள்:—

அதிர்ஷ்டம் இன்றோ நேற்றோ அல்ல ஜுவானை விட்டுச் சென்றது.

அனுதைச் சிறுவனான அவனுக்கு சுரம் வருகிறது. அவன் வேலை செய்யும் எஸ்டேட்டின் தலைவி அவனுக்கு நிறைய கொயனு தந்துவிட்டுக் கூறினள்.

செவிடாகி விடுவாய் பரவாயில்லை, நோய் தொலைந்துவிடும்.

ஜுவானின் சுரம் விட்டகன்றது. நோயிலிருந்து விடுபட்ட மகிழ்ச்சியால் தான் என்றைக்கும் செவிடனுகிவிட்ட உண்மையை அவன் உணர்ந்துக் கொள்ளவில்லை. கிராமத்தில் நிகழும் சண்டையிலும் படையிலும் அவனுக்குச் சேரவேண்டிய கட்டாயம் ஏற்படவில்லை என்பதும் இதனுல் கிடைத்த லாபம்.

இத்துடன் துரதிர்ஷ்டத்தின் ஓர் ஊர்வலம் அவனுடைய வாழ்க்கையில் புகுந்து செல்கிறது, இதுதான் கதைச் சுருக்கம். கடைசியாக அந்தக் கிராமத்தில் ஓர் குதிரைத் திருடனுக்குப் பதிலாக (Horse thief) அவன் சுட்டுக் கொல்லப்படுகிறுன். இத்துடன் அவனுடைய 'துரதிர்ஷ்டம்' அவனை விட்டுச் செல்கிறது.

பீட்டர் தி கிரேட் எனும் பெருமன்னனின் நல்லதோர் உருவ விளக்கம் தான் மோறீஸ் பில்னியாக் என்பவர் இயற்றிய 'நேசப் பீட்டர் கமாண்டர்' எனும் கதை. ஒரு மார்க்ஸீஸவாதி பீட்டர் பேரரசனை என்ன கணணேட்டத்துடன் பார்க்கிறுன் என்பதற்கு இதுவோர் நல்ல தெளிவு.

ரஷ்யாவின் சிறந்த கதாசிரியர்கள் தான்—வாலன்டீன்காட்டேயே, அலெக்ஸீடால் ஸ்டாய், அர்ஜெயேவ் எலென்ஸ்கி, என்பவர்கள்.

இவர்களில் கதை கூறும் திறமை டால்ஸ்டாயிடம்தான் நிறைய உண்டு. மைக்கல் ஜோஷென்கோவின் ஆசிய ரசக் கதைகளும் மிகச் சிறந்தவைகள் தான். ஹிட்லரின் போர் சில ரஷ்யக் கதைகளுக்கு உருவம் தருவதற்கு உதவியது. மக்கானே எனும் கவிஞனின் 'லெனின் கிராட் கதைகள்' பிரச்சாரக் கதைகள் என்பது மட்டுமல்ல. காவியத்தரத்திலும் உயர்ந்து காணப்படுபவைகள். ரஷ்யாவின் சாதாரண மனிதனின் நாட்டுப்பற்றும், வீரமும் டிக்கானேவின் கதைகளில் நிலையான உருவத்தைத் தேடிக் கொண்டன. வி. குரோசாவனின் போர்க்காலக் கதைகளும் போரிடும் ரஷ்யாவின் நிலைமைகளைச் சரியாக விளக்குபவைதான்

போர் முடிந்த ரஷியா கற்பனைக் காவியங்கள் (Creative Arts) இயற்றுவதில் அக்கரை செலுத்துகிறது என்பதற்கு அபரின் என்பவருடன் மற்ற சில ரஷியாவின் கதாசிரியர்களின் கதைகளும் சாட்சியம் கூறுகின்றன, இதைத் தெளிவு படுத்த இக்கதைச் சுருக்கத்தைப் பாருங்கள்.

ஓர் இளைஞன் மாஸ்கோவில் தங்கியிருக்கும் தன் மாமனிடம் சில போட்டோக்களைத் தருகிறுன். ஏதோ ஓர் கிரகத்தின் சில பகுதிகளை ஆகாயத்திலிருந்து படமெடுத்ததுபோல் அந்தப் படங்கள் காட்சியளிக்கின்றன. 'எந்தக் கிரகம் என்று கூற முடியுமா!' என்று இளைஞன் கேட்கிறுன். மாமாவிற்கு பதில் சொல்ல இயலவில்லை, சிலவாரங்களுக்குப் பிறகு அவர் மாமா இருபது வருடங்களாகக் கண்டிராத ரஷ்யாவின் தென்பகுதியைப் பார்ப்பதற்குச் செல்கிறுர். அங்கு காணும் மஹைட்ரோ எலக்டிரிக் இன்ஸ்டலேஷன்களும் பெரிய பெரியஅளவில் அணைக்கட்டுளும் இன்ன பிறவும்பார்க்கும்போது நான் ரஷ்யாவில் தான் இருக்கிறேனு! என்ற சந்தேகம் அவருக்குத் தோனறுகிறது. சின்னுட்களுக்குப் பிறகு தன்னுடைய மருமகனை பார்க்கிறுர். அவன் கூறுகிறுன்,

'அன்று நான் காண்பித்த போட்டோக்கள், பூமியின் ஓர் பகுதியின் —தென்ரஷ்யாவின் படங்கள்தான். சந்திரனுக்கும் பூமிக்கும் இடையே இருக்கும் ஸ்பெயின் ஸ்டேஷனிலிருந்து எடுக்கப்பட்ட படங்கள் அவைகள்.

புஷ்கினிலிருந்து ஆரம்பித்து இன்றுவரை வளர்ந்து வந்த கலைஞர்கள் அனைவரும் மனித வர்க்கத்தின் உயர்விற்காக கதைகள் இருக்க வேண்டும் என்று நம்பினுர்கள். சோவியத் கதாசிரியர்களும் இந்தக் கருத்துத்துடையவர்கள் தான். சோவியத் இலக்கியப் பகுதி வளரும் பிள்ளை—இன்னும் ஓட்டுரிமை கிடைக்காதவன் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

Tel: WIND. Phone: 55373

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ்: 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதருஸ்-1

பார்சல் ஆபீஸ்: 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1

மதருஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப் பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி; கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறேம்.

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம். கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறேம்.

கிளை ஆபீஸ்: 8. கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை
„ 103-1/127. பழனி ரோடு, திண்டுக்கல்
„ கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
„ வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

செய்திகள்

இலங்கை

இ. தி. மு. க. கிராண்ட்பாஸ் கிளையின் புதிய நிர்வாகம்

இ. தி. மு. க. பொதுச் செயலாளர் திரு. இரா. அதிமணி அவர்கள் தலைமையில் 31-7-55 ஞாயிறு மாலை 5 மணிக்கு சழகப்பணி மனையில் நடைபெற்றது.

கழகத்தின் புதிய நிர்வாகத்தின் அமைப்பைக்கருதி இடைக்கால நிர்வாகக்குழு எனறு கீழ்க் கண்டவாறு அமைக்கப்பட்டது.

செயலாளர் R. R. K. டேவர், துணைச் செயலாளர்: P. M. ஜலால், K. M. பாரூக் பொருளார் S. S. மணி. கூட்டம் இரவு 7-மணிக்கு முடிவுற்றது.

முத்தமிழ் மன்றம்

சிந்தும்பிட்டித் தெருவிலுள்ள முத்தமிழ் மன்னத்தினரால் மன்றப்பணி மனையில் "அன்பழகனுர்" அவர்களது அறிக்கைக் கிணங்க திருவள்ளுவர் விழா 30-7-55 சனிக்கிழமை மாலை 4½-மணியளவில் திருவாளர் ஜே. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைப் பெற்றது.

தலைவர் தனது தலைமை உரையில் 'வள்ளுவரை இன்னும் சிறிது காலத்தே மதப் பெரியார்களுள் ஒருவராய் ஆக்கி விடுவார்கள் என்று அஞ்ச வேண்டிய நிலையில் உள்ளோம். மதச் சார்பற்ற வள்ளுவரை மதச்சார்பற்ற நாட்களிலேதான் கொண்டாட வேண்டும் என்ற முடிவிர்கு வந்தனர் தமிழகத்தில் வதியும் அறிஞர்கள். ஆனுல் ஒரு சிலர் அதற்கு மாருக அவரது விழாவினை கொண்டாடினர் இது போன்ற நடவடிக்கைகளைக் காணுந்தோறும் உண்மையில் மனம்வருந்த வேண்டிய நிலை ஏற்படுகிறது' என்றுர்.

அடுத்து தோழர்கள், சி. பெருமாள் 'வள்ளுவரும், சாதலும்' என். கோபால் 'வள்ளுவர் கண்ட ஒற்றுமை' மா. யோ. தேவதாசன், 'திருக்குறள்' சில்தாஸ், 'வள்ளுவர் வாழ்க்கை' பாரூக். 'வள்ளுவம்' பக்ருதீன் 'திருக்குறளும், சிலப்பதிகாரமும்.'

என்ற தலைப்புகளில் பேசினர். இறுதியில் எல் தருமதாசன், நன்றி நவில கூட்டம் இனிது கலைந்தது,

பாண்டமங்கலம்

31-7-55-ல் நடைபெற்ற தி. மு. க. உறுப்பினர்கள் கூட்டத்தில் 27-6-55ல் தி. மு. கழக கட்டிட நிதிக்காக ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற எம் ஜி. ஆர். குழுவினரின் இன்பக் கனவு நாடகவரவு செலவு கணக்கு பரிசீலிக்கப்பட்டதில் ரூபாய். 16-11-6 மீதமுள்ளதென எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

பொறையார்

3-8-55 மாலை 6-மணிக்கு அழகிரிப் படிப்பகம் அமைப்புக்கூட்டம் தோழர் சி. ஜம்பு தலைமையில் நிகழ்ந்தது படிப்பக தலைவராக சி. ஜம்புவும் செயலாளராக இளமையும், துணைச்செயலாளராக கே. பக்கிரிசாமியும். பொருளாளராக S. செட்சிணுமூர்த்தியும் பொறுப்பாளராக M H M. அபுபக்கரும் செயற்குழு உறுப்பினராக தோழர்கள்: சு. சம்பந்தம் பொ. வரதராசன், சு. இலக்குவன், இரா. சுந்தரேசன் கா. கணபதி கோ. பொன்னுசாமி, மு இரத்தினவேலன், தேர்ந்தெடுக்கப்பட்டு பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டு தலைவர் நன்றி நவில கூட்டம் முடிவுற்றது.

வெள்ளவாவிப்புதூர்

4-8-55 வெள்ளவாவிப்புதூர் தி. மு. கழகத்தின் செயற்குழு உறுப்பினர் கூட்டம் செயலாளர். நா. இராமசாமி தலைமையில் இரவு 9 மணிக்கு ரேடியோ கட்டிடத்தில் நடைபெற்றது. வி. பி. அப்பாவு. திராவிடப்பண். பாடியதும். கணக்கு வரவு செலவு சரிபார்க்கபட்டு வந்திருந்த உறுப்பினர்கள் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது சே. சு. பழனிச்சாமி கு. வீரப்பன் கு. நாட்டருயன் ஆகியோர் சொற்பொழி வாற்றிய பின் போ. பெரியசாமி அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிது கலைந்தது.

குளித்தலை

31-7-55 ஞாயிறன்று குளித்தலை மஜீது பாண்டியன் மனற ஆதரவில் டாக்டர் ஆ. வெங்கிடாசலம் தலைமையில் திருவள்ளுவர் விழா நடைபெற்றது ஆரம்பப் பள்ளி, நடுத்தரப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவிகளின் குறள் ஒப்புவித்தல், சொற்பொழிவு, கட்டுரைப் போட்டி நடைபெற்று பரிசுகள் வழங்கப்பட்டன. பரிசுக்குரிய புத்தகங்களத்தனையும் தம் செலவில் மீ. சு. இளமுருகு பொற்செல்வி கொடுத்தார். தோழர்கள் கே. ஏ. பி. விசுவநாதம் ஆசிரியர் பெரியசாமி, மீ. சு. இளமுருகு பொற்செல்வி மற்றும் பலர் திருக்குறள் பற்றி பேசினர். ஓவியர் தி. வீ. பாலு தீட்டிய திருக்குறள் சித்திரங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.

பாண்டியன் படிப்பகம்

சென்னை திருவல்லிக்கேணி கே. எஸ். பாண்டியன் படிப்பகத்தின் இரண்டாம் ஆண்டு விழா, 7—8—55 ஞாயிறுமாலை சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்றது. கூட்டத் துவக்கத்தில் தோழர் இரா. சண்முகம் அவர்கள் இயக்கப் பாடல்களைப் பாடி இசை விருந்தளித்தார். 'நம்நாடு' பொறுப்பாசிரியர் தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்கள் தலைமை வகித்து வடநாடு தென்னுட்டை பல்வேறு துறைகளில் அடிமைப் படுத்தியிருப்பதைக் குறித்தும், ஐந்தாண்டுத் திட்ட ஓரவஞ்சனையைக் குறித்தும் பேசிய பின்னர் வழக்கறிஞர் கோகுல கிருஷ்ணன் அவர்கள் சமுதாயத்தில் உள்ள சீர்கேடுகளை குறித்தும் அதைக் களைய நாம் ஆற்றி வரும் பணியினைக் குறித்தும் பேசினுர்,

இறுதியாக அறிஞர் அண்ணு அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் இதுவரையில் ஜனநாயக முறையில் ஆற்றிய பணிகளையும் அது நடத்திய போராட்டங்களைக் குறித்தும் பேசினுர்.

பாண்டியன் படிப்பகத்தின் சார்பாக மாநில மாநாட்டுக்கு ரூ. 101 நிதியளிக்கப்பட்டது.

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

திராவிட நாட்டுக் கல்வி வரலாறு

திராவிடப்பித்தன்

25

பத்தொன்பதாவது நூற்றுண்டு பிற்பகுதியின் கல்வி வளர்ச்சியைப்பற்றி இந்த வாரம் தெரிந்து கொள்வோம். இந்தக் காலத்தில் துவக்கக் கல்வியும் சரி உயர்தரக் கல்வியும் சரி வெகு முன்னேற்றம் அடைந்தன என்பது அரசாங்க புள்ளி விவரங்களினின்றும் தெரிய வருவதாகும்.

சர் சார்லஸ் வுட் அவர்களின் 1854-ம் ஆண்டு அறிக்கையானது இந்திய கல்வி வளர்ச்சிக்கு வழி வகுத்துத் தந்தது. அதாவது ஆங்கிலக் கல்வியை இந்தியா முழுவதும் எவ்விதம் எப்படி படிப்படியாக

19-வது நூற்றுண்டின் பிற்பகுதியில் கல்வி வளர்ச்சி.

வளர்த்துவர வேண்டும் என்றெல்லாம் சட்டதிட்டங்களுடன் இந்திய சர்க்காருக்கு எடுத்துக் கூறியது. சார்லஸ் வுட் என்பார் இந்தியாவில் நடைபெற்று வந்த கிழக்கிந்திய கம்பெனியின் நிர்வாகத்தை மேற்பார்வையிடும் அதிகாரியாக இருந்தவர். இவர் பின்னர் லார்ட் ஹாலிபாக்ஸ் என்றழைக்கப்பட்டார். சார்லஸ்வுட் அறிக்கையின் முக்கிய நோக்கமாவது: ஆங்கிலக் கல்வி முறையை நாட்டு மக்களிடையே விரிந்த முறையில் பரவும்படிச் செய்தல், ஆங்கிலக் கல்வியுடன் மேல்நாட்டு நாகரீக பழக்க வழக்கங்களைப் பரவச் செய்தல், ஆங்கிலக் கல்வி—நாகரிகம் ஆகியவற்றில் தேர்ந்த இந்தியர்களை உற்பத்தி செய்தல் இவைகள் தாம் அவ்வறிக்கையின் நோக்கங்களாகும்.

இந்நோக்கங்களை நிறைவேற்றும் வழியாக சென்னை ஆட்சியினரால் கல்வி இலாக்கா ஒன்று புதிதாக ஏற்படுத்தப்பட்டது. மாகாணத் தலைநகர்களில் பல்கலைக் கழகங்கள் நிறுவுதல் வேண்டும் என்று அறிக்கை கூறியபடி பல்கலைக் கழகம் என்ற பெயரில் நடந்து வந்த சென்னை உயர்தரக் கல்லூரியானது 'சென்னைப் பல்கலைக் கழகம்' என சட்டபூர்வமாக உயர்த்தப்பட்டது. சட்டப்படி இணைக்கப்பட்ட இந்த சென்னைப் பல்கலைக் கழகம் 1857-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் முதல் பிரவேச பரிட்சை நடத்தியது. இப்பரிட்சையில் கலந்து கொண்டு எழுதிய 41 பேர்களில் 36 பேர் தேர்வு பெற்றனர். சென்னைப் பல்கலைக் கழகத்தின் முதல் பி. ஏ. பரிட்சை 1858 பிப்ரவரியில் நடைபெற்றது. இருவரே இருவர்தான் இப்பரிட்சையில் கலந்து கொண்டு எழுதினர். இருவரும் இலங்கை ஜாப்னு அமெரிக்கன் மிஷன் செமினரியினின்றும் இங்கு வந்து எழுதியவர்கள்,

இருவரும் தேர்வடைந்தனர். இவ்விருவரில் ஒருவர்தான் திரு. சி.வை. தாமோதாரம் பிள்ளை எனத் தெரிகிறது. சி. வை. தாமோதரம் பிள்ளை தொல்காப்பியத்தை பதிப்

முதல் திராவிட பட்டதாரி சி. வை. தாமோதரம் பிள்ளை

பித்த முதல் பதிப்பாசிரியராவர் என்பதும் புதுக்கோட்டை உயர்நீதிமன்ற நீதிபதியாகவும் இருந்தவர் என்றும் நேயர்கள் அறிந்திருக்கலாம். கிராண்ட் வழங்கி உதவியளித்தல் எனும் புதிய முறைப்படி துவக்கப் பள்ளிகளும், உள்நாட்டு மொழிப் பள்ளிகளும் ஆதரிக்கப்பட்டன. பள்ளிக்கூடங்களை மேற்பார்வை யிடுவதற்கான இன்ஸ்பெக்டர்கள் டெபுடி இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட்டனர்.

1870-71 ஆண்டு புள்ளி விவரப்படி சென்னை மாகாணத்தில் 7 தனிப்பட்டோர் நடத்தும் கல்லூரிகள் இருந்தன.

கிருஸ்தியன் காலேஜ்

டவடன் ப்ராடஸ்டான்ட் காலேஜ்

சல்லிவன் கார்டன் செமினரி

ஆகிய மூன்றும் சென்னை நகரில் இருந்தன. மசூலிப்பட்டினத்தில் சர்ச் மிஷனரி சங்கத்தினராலும், தஞ்சையில் எஸ். பி. ஜி. சங்கத்தினராலும் இருகல்லூரிகள் நடத்தப்பட்டு வந்தன. நாகைப் பட்டினத்தில் செயின்ட்ஜோசப் கல்லூரியும், கோயம்புத்தூரில் மிஸ்டர் ஸ்டேன்ஸ் என்பாரால் நடத்தப்பட்டக் கல்லூரியும் இருந்தன.

அதே 1870-71-ம் ஆண்டு புள்ளி விவரப்படி 5 அரசினர் கல்லூரிகள் நடைபெற்று வந்தன.

கும்பகோணம்—பெல்லாரி — கள்ளிக்கோட்டை—ஆகிய இடங்களில் நடைபெற்று வந்த மாகாணப் பள்ளிகள் அப்போது கல்லூரிகளாகப் பணியாற்றி வந்தன. கும்பகோணத்திலிருந்த மாகாணப் பள்ளி 1867ஓம், மற்ற இரு இடங்களில் இருந்த பள்ளிகள் 1867—68ஓம் கல்லூரிகளாக உயர்த்தப்பட்டன. மங்களூரில் 1868-ல் நிறுவப்பட்ட மாகாணப் பள்ளியானது 1868-ல் இரண்டாந்தரக் கல்லூரியாக உயர்த்தப்பட்டது — ராஜ முந்திரியிலிருந்த பள்ளிமட்டும் கல்லூரியாக உயர்த்தப்படவில்லை. ஆனால் பின்னர் கல்லூரியாக உயர்த்தப்பட்டது.

மேற்கூறிய 1870-71-ம் ஆண்டு விவரப்படி துவக்கப்பள்ளிகளின் புள்ளிக்கணக்காவது: 2474 சிறுவர் துவக்கப்பள்ளிகளில் 55835 சிறுவர்கள் கல்வி பெற்று வந்தனர். 264 சிறுவர் சிறுமியர் பள்ளிகளில் 9007 சிறுவர்களும் 2136 சிறுமியர்களும் கல்வி பயின்று வந்தனர். சர்க்காரால் நடத்தப்பட்டு வந்த துவக்கப்பள்ளிகள் மொத்தம் 16 தான். இப்பதினறு பள்ளிகளும் கஞ்சம் ஜில்லா மலைவாழ் சாதியினருக்காக நடத்தப்பட்டு வந்தனவாகும். நெல்லூரில் ஏனுதி சாதி மக்களுக்கு ஒரு துவக்கப்பள்ளி நடைபெற்று வந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்படி ஆண்டு விவரப்படி 8 ஆசிரியா பயிற்சிப் பள்ளிகள் 188 பேர்களுக்கு பயிற்சி அளித்து வந்தன. ஒரு பெண்கள் ஆசிரியப் பள்ளியில் 7 மாணவிகள் பயிற்சி பெற்று வந்தனர், கிருஸ்துவ மிஷனரிகளால் நடத்தப்பட்டுவந்த 5 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் 206 பேர் பயிற்சிப் பெற்று வந்தனர். ஒரு பயிற்சிப் பள்ளியில் 58 பெண்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டு வந்தது.

இக்காலத்தில் பெண்கள் கல்வி வளர்ச்சியிலும் சிறிது நாட்டம் செலுத்தப்பட்டு வந்தது. கிருஸ்துவ மிஷனரிகளால் பெண்களுக்கும் தனிப் பள்ளிகள் நடத்தப்பட்டு கல்வி புகட்டப்பட்டு வந்த வரலாறு முன்னரே கூறப்பட்டிருப்பது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். முகம்மதிய மக்களின் கல்வி வளர்ச்சிக்கும் இக்காலத்தில் ஊக்கமளிக்கப்பட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

—தொடரும்

அன்பு

பட்டாளத்துத் தலைவன் குதிரை லாயத்திற்கு வெளியே ஒரு குதிரையைச் சுற்றி நின்றுகொண்டிருந்த சில வீரர்களை நோக்கிச் சென்றுன். ஒவ்வொரு வீரனும் ஒரு பிடி சர்க்கரையைக் கையில் வைத்துக் கொண்டிருந்ததைக் கண்ட தலைவன் மகிழ்ச்சியுடன்,

'நீங்கள் பிராணிகளிடம் அன்பு பாராட்டுவதை நான் மிகவும் பாராட்டுகிறேன். ஆனுல் மற்ற குதிரைகளை விட்டுவிட்டு இக்குதிரையை மட்டும் நீங்கள் யாவரும் நேசித்து அதற்கு சர்க்கரையையும் கொடுக்க இருப்பதுதான் எனக்கு விளங்கவில்லை" என்று சொன்னுன்,

"இன்று காலையில் இக்குதிரை தான் 'சார்ஜன்டை'ப் பாறையின் மீது தள்ளியது." என்று பதிலளித்தான் ஒரு அவசரக் குடுக்கை.

—கஜா

பம்பாயில் திருவள்ளுவர் நினைவு நாள்

பம்பாய் திருவள்ளுவர் கலா மன்றத்தினரால் 31—7—55 இரவு 7-மணி அளவில் வி. கே. வாடி 'குடிஅரசு' நிலையத்தில் திருவள்ளுவர் நினைவுநாள் விழா நடைபெற்றது. தோழர்கள் எஸ். எஸ். சண்முகநாதன், கே. கே சீனிவாசன் ஆகியோர் பண் இசைத்தனர். விழாவிற்கு பாவலர் பாலையா அவர்கள் தலைமை வகித்து குறளின் சிறப்பைப்பற்றி விரிவுரை ஆற்றினர்.

வள்ளுவர் உருவப் படத்தைத் திறந்து வைத்து எஸ். வள்ளிநாயகம் அவர்கள் (முன்னுள் ப. மா. தி. மு. க. செயலாளர்) பேசும்போது வள்ளுவன் வாழ்ந்த காலத்திலிருந்து பாரதிதாசன் காலம் வரை வாழ்ந்த புலவர்கள் குறளைப்பற்றி கூறிச் சென்றதையும், 'அ விலிருந்து ஆரம்பித்து கடைசி குறளான ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம் கூடி முயங்கப் பெறி'ன்' என கடைசிஎழுத்தில் கொண்டு முடித்த எந்த ஒரு புலவனையும் கண்டதில்லை எனக் கூறி முடித்தார்.

அடுத்து தோழர் ந. சிவபாண்டியன் அவர்கள் சொற்பொழிவாற்றியதும், இறுதியாகபேசிய மன்ற உறுப்பினரும் 'பலிபீடம் நோக்கி' ஆசிரியருமான நெல்லை இரா. இளம்வழுதி அவர்கள் பேசும்போது குடத்திலிட்ட விளக்காக காட்சி யளிக்கும் குறள் குன்றின் மேலிட்டு ஒளிவீசும் நாள் வெகு தூரத்தில்லை. என்று கூறி முடித்தார். தலைவர் முடிவுரைக்குப் பின் செயலாளர் உ. அ. செல்லையா நன்றிகூற கூட்டம் இனிது கலைவுற்றது.

கலை அரங்கம்

குலேபகாவலி

★

ஆர். ஆர். பிக்சர்ஸாரின் மகத்தான தயாரிப்பு

★

•

நாடக மேடைகளுக்கு ஓர் தனிச் சிறப்பிருந்த காலத்திலேயே, பார்த்துப் பார்த்து சுவைத்து இறுதியாக பழமையானதென்று ரசிகர்களின் தீர்ப்புக்கு இலக்கான 'குலேபகாவலி'க்கு இன்று புதுமெருகிட்டு திரைப்பட ரசிகர்களின் பேராதரவை பெறச் செய்துள்ளனர் ஆர். ஆர். பிக்சர்ஸார். இம் முயற்சி உண்மையிலேயே பாராட்டக் கூடியதுதான்.

கதை—தனது இரண்டாம் மனைவியின் சூழ்ச்சியை அறியாத மன்னன் முதல் மனைவிக்குப் பிறந்த மகனை சந்திக்காமலேயே காலம் கழித்து வருகிறான். முதல் மனைவியின் மகன் தாசன்முல்க் மன்னனைக் கண்டால் மன்னன் கண்பார்வை யிழந்துவிடுவார் என்பதே இரண்டாம் மனைவி செய்துவந்த சூழ்ச்சியாகும். எனவே முதல் மனைவியையும், அவனது மகனையும் ஊர் எல்லையில் தனித்து வாழச் செய்தான் மன்னன். ஒருநாள் அந்த எல்லைக்கடுத்த காட்டில் வேட்டையாட மன்னன் தனது பரிவாரங்களுடன் செல்லுகிறான். அதுசமயம் மன்னனைப் புலி ஒன்று துரத்திவர அதைக்கண்டு நடுங்கி மூர்ச்சை யற்று விழுகிறான் மன்னன். அத்துடன் மன்னனின் கண்கள் அங்கிருந்த ஒரு விஷச்செடியின் மீது படவே கண்கள் விபத்துக்குள்ளாகி பார்வை யிழக்கச் செய்கிறது.

ஊர் எல்லைக்கருகில் வசித்துவந்த மூத்த மனைவியின் மகன் தாசன்முல்கும் வேட்டையாட அக்காட்டிற்கு வருகிறான். இந்நிலையில் மன்னனுக்கு நேர்ந்த அபாயத்தைத் தடுத்து புலியையும் விரட்டியடிக்கிறான். எனினும் விஷச் செடியின் மீதுபட்ட மன்னனின் கண்கள் மட்டும் மீண்டும் பார்வை பெற முடியவில்லை, எனவே தாசன்முல்க் வேணுமென்றே மன்னன் முன்தோன்றி பார்வை யிழக்கச் செய்தான் என்று தீர்ப்பு கூறப்பட்டு கடுந் தண்டனையும் விதிக்கப்படுகிறது, தாசன்முல்கும் அவனது தாயும் எவ்வளவோ நியாயங்களை எடுத்துக் கூறியும் மன்னனும் அமைச்சர் குழுவும் ஏற்கவில்லை, இந்நிலையில் முதியவர் ஒருவர் யோசனைகூற அதற்கேற்ப ஒரு மாதத்திற்குள்ளாக பார்வை யிழந்த கண்களை மீட்கும் குலேப் என்ற மலரை கொண்டு வந்தால் தாசனுல் தனது தண்டனையிலிருந்து மீளமுடியும் என்ற நிபந்தனை விதிக்கப்படுகிறது.

அதற்கேற்ப தாசன்முல்க் அந்த மலரைத் தேடி ஊர்ஊராகச் செல்ல, இறுதியாக மலருடன் லக்பேஷ்வா, மஹுதா, பகாவலி ஆகிய (சகோதரிகள்) மாதரசிகளுடன் திரும்பி வந்து தந்தை இழந்த பார்வையை மீண்டும் பெறச்செய்கிறான்.

திரைப்பட கதை—வசனம், பாடல்—தஞ்சை ராமையதாஸ் உருவாக்கி யிருக்கிறார். மூலக்கதையின் அமைப்புப்படிபிரமாதமான கருத்துக்களை எதிர்பார்க்க முடியாதெனினும் பகாவலி—தாசன்முல்க் பகுத்தறிவுப் போட்டியிலும், மற்றும் சில கட்டங்களிலும் தஞ்சை ராமய்யதாஸ் தமது கற்பனையையும் கருத்தாழத்தையும் எடுத்துக் காட்ட முயற்சித்திருப்பது பாராட்டத் தக்கதாகும்.

நடிப்பு

தாசன்முல்க்காக வரும் புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் கத்திச் சண்டை, புலியுடன் போர், ஆகியவைகளில் மட்டுமின்றி இப்படத்தில் சாகசமான செயல்களிலும் தனது நடிப்பின் திறமையைக் காட்டியிருப்பது ரசிகர்களைப் பெரிதும் மகிழ்விக்கிறது.

வீராவேசமான கட்டங்களில் தனது திறமையை எவ்வளவு உச்ச நிலையில் வெளிப்படுத்த முடியுமோ அது போலவே நகைச்சுவைக் கட்டத்திலும் எம். ஜி. ஆர். தனது ஆற்றலை எடுத்துக்காட்டியிருக்கிறார்.

வயோதிகர் வேடத்தில் தோன்றி லக்பேஷ்வாவுடன் ஆடிப்பாடிக் கூத்தாடும் கட்டத்தில் எம். ஜி ஆர். அவர்களின் நடிப்பு உச்சநிலையில் செல்லுகிறது. எனினும் லக்பேஷ்வாவின் தோழியர்களுடன் சேர்ந்து வயோதிகர் ஆட்டமாடுவதை ஓரளவு குறைத்துக் கொண்டிருந்தால் மிகக் கச்சிதமாய் இருந்திருக்கும். இதில் டைரக்டர் ராமண்ணா அவர்களும் கவனம் செலுத்தாதது ஏனோ?

நாகவல்லி நகரில் பிரவேசிக்கும் கட்டத்திலும் எம். ஜி. ஆர். தமது நடிப்பின் மூலம் ரசிகர்களின் பாராட்டுதலை அடுக்கிக் கொண்டே போகிறார். அதுபோலவே புலியுடன் போரிடும் காட்சியில் எம். ஜி. ஆர். அவர்களின் உணர்ச்சிவசமான நடிப்பு அனைவரையும் சிறிது நேரம் பிரமிப்படையச் செய்கிறது. ஆக எம். ஜி. ஆர்; நடிப்பின் திறமையினால் முதுமையடைந்த "குலேபகாவலி" புதுமுறுக்கு பெற்றது என்றே கூறலாம்.

லக்பேஷ்வா வாகத்தோன்றும் தோழியர் டி. ஆர். ராஜகுமாரி, தமிழ் நாட்டு நடிகைகளில் தனக்குள்ள தனிச்சிறப்பைச் சிறிதும் குறைத்துக் கொள்ளாத வகையில் மிகக் கச்சிதமாக நடித்திருக்கிறார். ரசிகர்கள் எவ்விதத்திலும் ஏமாற்றமடையா வண்ணம் தோழியர், டி. ஆ. ராஜகுமாரி தான் ஏற்றுள்ள வேடத்தின் மூலம் மகிழ்விக்கிறார்.

தன்னுடன் பகடையாட வரும் இளவரசர்களைத் தோற்கடிக்கச் செய்யும் கட்டங்கவில் தோழியர் டி. ஆர். ஆர். அவர்கள் "வில்லேந்தும் வீரரெல்லாம்" என்ற பாடலுக்கேற்ப நடிப்பதானது இன்னும் எத்தனை ஆண்டுகளாயினும் தன்னிடமுள்ள நடிப்புக்கலையின் தனி உயர்வை எவராலும் வெல்ல முடியாது என்பதை எடுத்துக் காட்டுவதைப் போல யிருக்கிறது.

மகமூதாவாகத் தோன்றும் தோழியர். ராஜ சுலோசனா மதுவருந்திப் பாடிக்கொண்டு வரும் கட்டத்தில் மிகப் பிரமாதமாக நடித்திருக்கிறார். எனினும் இப்படத்தில் இவருக்கு அதிகம் வேலையில்லாமல் செய்தது ஒரு குறையாகும்.

" குலேபகாவலி " யில் எம். ஜி. ஆர். தோன்றும் ஒரு காட்சி

பகாவலியாக வரும் தோழியர். ஜி. வரலட்சுமி சுமாராக நடித்திருக்கிறார்.

குலாமாகத் தோன்றும் தோழர் சந்திரபாபு, குல்ஸாராக வரும் தோழியர் ஈ. வி. சரோஜா ஆகியோரின் நடிப்பும் மிகப் பிரமாதமாயிருக்கிறது. இவர்கள் இருவரையும் இப்படத்தில் நன்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

தோழர், கே. ஏ. தங்கவேலு தனக்கு கொடுக்கப்பட்ட பாகத்தைக் கூடுமான அளவு கச்சிதமாகவே நிறைவேற்றியிருக்கிறார்.

பாடல்கள் :— சிலவற்றில் கருத்தும் சங்கித அமைப்பும் பாராட்டதக்க வகையில் அமைந்திருக்கிறது. "வில்லேந்தும் வீரரெல்லாம்" "சொக்கா போட்ட நவாபு" "நகாவலி நாட்டிலே" "பழுத்த பழம் ஆசைப்பட்டு" "தாகமும் சோகமும்" முதலிய பாடல்கள் ரசிகர்களின் செவிக்கு விருந்தளிக்கின்றன, மற்ற பாடல்களும் சுமாராகவே யிருக்கின்றன.

பின்னணிப் பாடகாகளான:- டி. எம். சவுந்திரராசன், இசைமுரசு நாகூர் அனிபா, திருச்சி லோகநாதன், என். சி. கிருஷ்ணன், பி. லீலா, ராஜா, ஜிக்கி, ரத்தினமாலா ஜமுனாராணி ஆகியோரும் தங்களின் திறமையின் மூலம் குலேபகாவலிக்கு புகழைத் தேடி தந்திருக்கின்றனர்.

குவோவாடிஸ் என்ற ஆங்கில படத்தின் ஒரு காட்சியைப் போல, புலியுடன் தாசன்முல்க் போராடும் மேடையை அமைத்திருப்பது மிகவும் பெருமைபடக் கூடியதாகும். இதுபோன்ற கட்டங்களில் டைரக்டர் ராமண்ணா கையாண்டுள்ள முறைகள் அனைவராலும் பாராட்டக் கூடியது மட்டுமல்லாமல் எதிர்காலத்தில் இம் முயற்சியில் அவா முழு வெற்றி பெறக் கூடும் என்பதே ரசிகர்களின் தீர்ப்பாகும்.

தமிழ்ப் படங்களில் நிஜப்புலியைக் கொண்டுவந்து தோன்றச் செய்வது முதன் முதலாக இப்படத்தில்தான் என்று கூறலாம். ஏராளமான பொருட் செலவில் தயாரிக்கப்பட்ட இந்தப் புலிச் சண்டை காட்சியில் இன்னும் சற்று கவனம் செலுத்தியிருந்தால் அக்காட்சியில் காணப்படும் சில குறைபாடுகள் நீக்கப்பட்டிருக்கலாம்.

குலேபகாவலி போன்ற கதைகளில் பிரமாதமான கற்பனைகளை எதிர்பார்த்து ரசிகர்கள் வரமுடியாதெனினும் இப்படத்தில்தோன்றும் நடிகர்களின் திறமையையும், மற்ற காட்சிகளையும் பெரிதும் எதிர்பார்த்தே பிரதி தினமும் ஏராளமான மக்கள் திரண்டு செல்லுகின்றனர்: அவ்வித நம்பிக்கையுடன் வரும் ரசிகர்கள் ஏமாற்றமடையாவண்ணம் நடிகர்களின் திறமை, டைரக்டர் ராமண்ணா அவர்களின் ஆற்றல், இதர அம்சங்கள் ஆகியவைகளின் துணையால் 'குலேபகாவலி' தலைநிமிர்ந்து காட்சியளித்து வருகிறது,

—வீரன்

" நாடோடி மன்னன் "

★

பிரபல 'பிரிசினர் ஆப் ஜெண்டா' என்ற படத்தின் கதையைத் தழுவி, புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனின் எம். ஜி. ஆர். பிக்சர்ஸ் சார்பில் தயாரிக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார். அவருடன் பானுமதி, சக்ரபாணி, சகுந்தலா முதலியோர் நடிக்கலாம் என்று தெரிகிறது.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் என். வி. நடராசன், சோமு அச்சகம், 16, [illegible] தெரு, சென்னை 1.